VASANTHAM Tamil Monthly 1 - 6 مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية





# வசந்தம்

மாத இதழ்

AR-RABAE


மார்ச் ௨00௮ March 2008

வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்!




# இஸ்லாத்தைத் தோற்றுவித்தவரா முஹம்மத் (ஸல்)?

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية




IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية
Extn: 208 2444117
رحمة للعالمين...
www.ipc-kw.com

வசந்தம் மாத இதழ்
வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்!




VASANTHAM - Ar-Rabae
Tamil Monthly
March 2008
மார்ச் 2008
மலர் । இதழ் 6

**CHIEF PATRON**
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari

**EDITOR**
ஆசிரியர்
M.A. Abdul Musavir

**EDITORIAL BOARD**
N.M.M. Hussain Islahi
Ameer Hasan Nainar Madani
Faizal Muhammad Najahi
Muhammad Jabir Deeni
Moulavia Farzana Rafeeq

**DESIGN**
வண்ண உருவரைபடம்
Nader Bellal
IT Section-IPC

**PUBLISH**
வெளியீடு
ISLAM PRESENTATION COMMITTEE
KUWAIT

**CONTACTS**
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT

**DIAL**
2444116, 2444117 Extn: 208

**FAX**
2400057
Attn: IPC—VASANTHAM

**e-MAIL**
amusavir@gmail.com

**WEBSITE**
www.ipc-kw.com

# இந்த இதழில்..!

2 வாசகர் வசந்தம் — வண்ணத்துப்பூச்சி நிறமுடுத்தி..!

3 ஆசிரியரிடமிருந்து — இம்மாமனிதரைத் தெரிந்து கொள்ளுங்கள்!

6 சிறப்புக் கட்டுரை — அறிவியலையே அசத்திய அறிஞன்!

8 சிறப்புக் கட்டுரை — அகிலத்துக்கோர் அருட்கொடை!

13 பதிவுகள் — திருக் குர்ஆன் மனனப்போட்டி பரிசளிப்பு விழா!

14 ஆளுமை — அனைவருக்கும் அன்பான அழகிய ஆதவன்!

15 ஆளுமை — பிஞ்சுள்ளங்களையும் போற்றிய பிதாமகன்!

16 வாழ்க்கை — காலடியில் சிம்மாசனம்., ஈச்ச ஓலையே அரியாசனம்

17 மகளிர் — பெண்ணினத்தைப் போற்றிய பெருமானார் (ஸல்)

18 குணநலன் — நற்குணங்களின் நாயகன்!

19 வாக்குமூலம் — ..அவர்கள் என்ன கூறுகின்றார்கள்..?

4 

முகப்புக் கட்டுரை

10 

குவைத்தில் Dr. ஜாகிர் நாயக்

20 

கவிதைப் பக்கம்

تعرف على هذا الرجل العظيم - هل نبينا محمد ﷺ مؤسس الإسلام ؟- معجزات الرسول ﷺ يوافقه العلم الحديث - وما أرسلناك إلا رحمة للعالمين - الدكتور ذاكر نايك في الكويت - تكريم حفظة القرآن الكريم ( مسابقة الرهيماني ) - تعامل النبي ﷺ مع الكبير - تعامل النبي ﷺ مع الصغير - دروس وعبر من آخر حياة النبي ﷺ - الرجل الوحيد الذي رفع شأن المرأة - خلق الرسول محمد ﷺ - ماذا يقولون عن النبي محمد ﷺ ؟ - عالمية الرسالة المحمدية ( أشعار )

# வண்ணத்துப்பூச்சி நிறமுடுத்தி...!




மாதந்தோறும் மனங்களை வருடும் வசந்தத்தின் சுகந்தத்தை (சுகந்தம்- சொற்பிரயோகம், நன்றி வசந்தம், ஜனவரி 2008 இதழ்) சுவாசிப்போரில் நானும் ஒருத்தி! சொந்த நாடு போன்ற உணர்வில் குவைத் வாழ்க்கை இருந்தாலும் அதன் வரலாறு தெரியாது எமக்கு. கலங்கரையாய் இருந்தது, அதுபற்றிய தகவல்கள்! வண்ணத்துப்பூச்சி நிறமுடுத்தி உள்ளத்து ஆகாயத்தில் நித்தமும் சிறகடித்துக் கொண்டிருக்கின்றது வசந்தம்! முன் இதழ் பிரசவித்த கஅபா விஷயமும் சாலை (நான்) பெற்ற இரத்தினக்கற்களே!

**அ. ஜீபா ஃபாத்திமா**
கொழும்பு, இலங்கை
சால்மியா - குவைத்
zeba2000@gmail.com

ஒவ்வொரு மாதமும் 'வசந்தம்' (இதழ்) வீசுவதினால் வாசனை மட்டும் வருவதில்லை எனக்கு... உடன் யோசனையும் வருகுது! ஆம்! வாழ்க்கைப்பாதை சரியே நடைபோட இனி கவலை இல்லை... காரணம் பாதை முழுக்க 'வசந்த' முல்லை இருக்கு! மனிதகுலம் மணிமகுடமாய் விளங்க விஷயங்களை விரிவாகத் தரும் வசந்தம் இருக்கு, கவலை வேண்டாம் இனி நமக்கு! தொடரட்டும் பணி!


**இ. ஜுபைர் (பர்மா)**
புதுச்சேரி - இந்தியா
ஸுலைபிய்யா

வசந்தத்தின் தொடர் வாசகன் நான்! அதைப் படித்து முடித்தவுடன் என் நினைவில் வருவது ஒரு தொலைக்காட்சி விளம்பரம்! ஊட்டச்சத்து சம்பந்தமான அந்த விளம்பரத்தில் கடைசியாக தன் தாயைப் பார்த்து மகன் கூறுவான்: 'நான் வளர்கிறேனே மம்மி!' வசந்தம் படித்து நாம் ஒவ்வொருவரும் கூறலாம், 'அறிவுரீதியாக வளர்கின்றோம்' என்று!

**வின்சென்ட் ஜார்ஜி**
பட்டாபிராம், சென்னை
ஹவல்லி - குவைத்

'வாசிக்க மட்டுமல்ல..' எனும் வசந்தம் கண்டேன். வாசித்தேன். விளங்கின விஷயங்கள்! இருபத்தி எட்டு ஆண்டுகளாக குவைத்தில் இருந்தும், அதுகுறித்த பல செய்திகள் அறியாமலிருந்ததை தெளிவுபடுத்தியது வசந்தம்...! பின் அட்டை விளம்பரமென மடித்து போட்டபோது, தேய்ந்துகொண்டிருக்கும் சித்தாந்தம் கண்டு சிந்திக்க வைத்தது வசந்தம்..! மனித இனம் உயர்ந்த இலட்சியங்களுக்காக, தன்னை உயர்த்திக்கொள்ள வழிகாட்டும் 'வசந்தத்தின்' சேவைகள் இன்னும் வளர வாழ்த்துக்கள்..!

**'விட்டுக்கட்டி" மஸ்தான்**
இந்தியா
ஷுவைக் - குவைத்




புலம்பெயர்வாசிகளின் பிரச்னைக்கு அழகிய - நிரந்தர தீர்வுக்காக முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்து மக்காவாசிகள் மற்றும் மதீனாவாசிகள் இணைந்த சகோதரத்துவ வாழ்க்கையை முன்வைத்தது புதிய சிந்தனை! எந்த இனத்தை, எந்த நாட்டை, எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருப்பினும் அகதிகளாக எம் சகோதரர்கள் படும் அவஸ்தைகள் சொல்லி மாளாது. உலகம் முழுக்க இப்பிரச்னை தீர இறைவன் துணை புரிவானாக!

**நாகேஸ்வரன்**
ஹபரனா, இலங்கை
சால்மியா - குவைத்

வெளிநாடு செல்லும் ஒவ்வொருவரையும் இரத்த உறவுகள் 'சரியாக டிராப்டு அனுப்பு, நாங்க உன்ன நம்பித்தான் இருக்கோம், மறந்துராதே!' என்றுதான் அடிக்கடி நினைவுபடுத்தும். ஆனால், ஒழுக்க வாழ்வையும் தனது சுயஆளுமையையும் நினைவுபடுத்தி எச்சரிப்பது அபூர்வம். எளிய தமிழில், இனிய நடையில் - சாதாரண மனிதனும் நெஞ்சில் பதிந்துகொள்ளும் வண்ணம் - தன் சகோதரன் சத்திய வாழ்வில் நிலைத்திருக்க நாடிய சகோதரியின் உள்ளத்து அவாக்கள் நல்முத்துக்கள்!

**முஹம்மத் யூஸுஃப்**
இராமநாதபுரம்
ஃபஹாஹீல் - குவைத்



## கடல் கடந்து வந்தவை!

1994-98 ஆண்டுகளில் குவைத்வாசி நான்! IPC வெளிக்கொணரும் 'வசந்தம்' இதழ் கண்டு இன்புற்றேன். வாழ்த்துக்கள்!

**எச்.க்யூ. நஜ்முதீன்**
இராமநாதபுரம், இந்தியா

குவைத்தின் அனைத்துக்கால வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக அடக்கி விலாவாரியாக தந்தது பாராட்டுக்குரியது. பொருள் செறிந்த - தாக்கமான ஆக்கம்!

**ஷேக் முஹம்மத்**
பெஸ்ட பில்போர்ட அட்வர்டைஸிங்
துபை, யு.ஏ.இ.

கடல் கடந்து மின்னஞ்சல் மூலம் மின்னலென வந்து 'உள்பேழை' - Inbox-இல் குவிந்துவிட்டன வாசகர் கடிதங்கள்! அனைத்தும் பிரசுரிக்க பக்கங்கள் போதா..! எனினும் இடம்பெறத் தவறிய இனிய நெஞ்சங்களின் பட்டியல் இதோ..!

**யு.ஏ.இ.**
ஷார்ஜா
அலெக்ஸ் பாண்டி
சுகுமாறன்
முகீத் முஜ்தபா அலீ
துபை
முதுவை ஹிதாயத்
ஓமன்
ரஹ்மான் ஸிராஜ்

**ஸவூதி அரேபியா**
தம்மாம்
என். அதாவுல்லாஹ்

**சிங்கப்பூர்**
ஜபர் ரஹ்மானி
முஸ்தபா

**மலேஷியா**
கோலாலம்பூர்
முருகன்

**இலங்கை**
அப்துல்லாஹ் MFDC
எம். ஆர். எம். ஸல்மான்

**இந்தியா**
சென்னை
இராஜ்குமார்
எச். அப்துர் ரகீப்
ஆசிரியர் - சமரசம்

இந்த இதழின் வலப்பக்கங்களில் உள்ள நபிமொழி முத்துக்களைத் தொகுத்தவர் சகோதரி ஸினூஃபா அன்ஸார்!

இறைத்தூதர் முஹம்மத் அவர்களைக் குறிக்க (ஸல்) எனும் சிறப்பு சொல் வழக்காடல் பயன்படுத்தப்படுகின்றது. இதனை " ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்று வாசிக்கவும். இதன் பொருள் விளக்கத்துக்கு 9-ஆம் பக்கம் பார்க்க!

வாசகர் வசந்தம் பகுதிக்கு வாசகர்களிடமிருந்து கடிதங்கள் வரவேற்கப்படுகின்றன. வாசகர்கள் தங்கள் படைப்புக்களை முதல் பக்கத்தில் உள்ள வசந்தம் முகவரிக்கோ அல்லது amusavir@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பலாம்.









# இம்மாமனிதரைத் தெரிந்துகொள்ளுங்கள்!

உலக மக்கள் நேரியவழியில் நடைபோட, இப்பேரண்டத்தைப் படைத்த இறைவன் பல்வேறு தீர்க்கதரிசிகளை தனது தூதர்களாக அனுப்பியிருக்கின்றான். அவர்கள் உலகம் முழுவதும் அனைத்துப் பகுதிளிலும் வந்திருக்கின்றார்கள். சுமார் 1430 ஆண்டுகள் முன்பு வந்த அப்படியொரு தீர்க்கதரிசியைப் பற்றி அறிந்துகொள்ளவில்லையெனில், எமது வாழ்வுக்கு எந்தவொரு பொருளுமில்லை. இதோ,அவரது வாழ்வில் ஒரு சம்பவம்...!

அந்த மனிதர் அரசராக இருப்பினும் உலகியல் தேவைகள் நிறைவேற செல்வ வளம் அவரிடத்தில் கொட்டியிருக்கவில்லை. சாதாரண மனிதர்களைப் போலவே பிறரிடத்தில் கடன் வாங்குவது, தருவது போன்ற வழக்கங்களுக்கு அவரும் விதிவிலக்கல்ல. ஒரு யூதனுக்கு அவர் கடன் தர வேண்டியிருந்தது. ஆனால், கடன் தொகை திருப்பித் தரவேண்டிய கால அவகாசம் முடிவுறுவதற்கு முன்னரே, அதைக் கேட்டு வீட்டு வாசலில் நின்றுவிட்டான், அந்த யூதன்! கடன் திரும்பக் கேட்டு அவருடைய முன்னோர்களையெல்லாம் திட்டி வம்புக்கு இழுத்தான். அன்னாருடைய வீட்டுவாசலில் அவன் செய்துகொண்டிருந்த இந்த நியாயமற்ற அநாகரிகப்போக்கு மாலை வரை நீண்டது. அன்னாருடைய தோழர்கள் அவனை இரண்டில் ஒன்று பார்த்துவிட எத்தனித்தனர். ஆனால், அந்த மாமனிதர் அமைதியாக, 'இறைவன், முஸ்லிமல்லாதார் மீது அக்கிரமம் புரிய எம்மை அனுமதிக்கவில்லை' என்று கூறி தடுத்தார். அடுத்த நாள் அதிகாலை வரை இந்த வசைமாரியைப் பொழிந்துகொண்டிருந்த அந்த யூதன் ஒரு கட்டத்தில் சோர்வடைந்தவனாய். 'உண்மையில் தனது வேதம் கூறும் அந்த பொறுமையின் திருவுருவம், இறுதி தீர்க்கதரிசி நீர்தாமா என்பதை சோதிக்கவே வந்தேன்' என்று கூறி அம்மாமனிதரிடம் சரணடைந்தான். அவர்தம் கொள்கைக்கு தன்னை அர்ப்பணித்தான்!

-இது பொறுமை, - இது சகிப்புத் தன்மை!

இன்று பாருங்கள்!

மீன் சந்தையில் பல்வகை மீன்களைக் கூறு கட்டி, கூவி விற்பதுபோல் ஆகிவிட்டது வாழ்க்கை! பொறுமையா, கிலோ என்ன விலை? சகிப்புத் தன்மையா, அது எப்படி இருக்கும்? என்று கேட்கும் அளவுக்கு மாற்றம்! வாழ்வின் ஒவ்வொரு துறை குறித்தும் சரியான கண்ணோட்டம் இல்லாது போனதால் அவற்றிடையே தொடர்பற்ற நிலை! அதனால் வளர்ச்சியில் மந்த நிலை! மனிதனை மனிதன் சுரண்டுகின்றான். அரசியலில் மோசடி, பொருளாதாரத்தில் சுரண்டல்! குடும்ப அமைப்பில் சீர்குலைவு, கல்வியில் கலவி, சமூகவாழ்வில் சச்சரவு! முன்னேற்றத்தில் பொறாமை, வளர்ச்சியில் சந்தேகம்!அடுப்படி முதல் ஆன்மிகம் வரை , அந்தரங்கம் முதல் ஐ.நா.சபை வரை நிச்சயமற்ற போக்கு!

இவை எல்லாவற்றுக்கும் விடை காண முடியாமல் தவிக்கிறது இந்த உலகம். அரசியலா இவரைப் பார், ஆன்மிகமா இதோ இவர், பொருளாதாரமா இவர்தான் அதற்கு பொக்கிஷம், கல்வியா அவர்தான் அதில் ஞானி, பெமினிசமா இதோ இவர்தான் பெஸ்ட் என்றுதுறைக்கென்று ஒரு துரையை நோக்கி கை நீட்டுகின்றது உலகம்!

ஆனால், இம்மாமனிதர், மார்க்கத்தையும் வாழ்வின் வெவ்வேறு துறைகளையும் பிரிக்கச் செய்யாது அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து பன்னூறாண்டுகள் மனிதகுலம் சாதிக்க முடியாததை இருபத்தி மூன்றே ஆண்டுகளில் சாதித்துக் காட்டினார்! அதனால்தான் அன்னாரைப் போற்றுவோரும் சரி, விமர்சிப்போரும் சரி, அவர்தம் சாதனையை மறுக்க முடியவில்லை!

ஒரு சோற்றுப் பதமாக, போஸ்வொர்த் ஸ்மித் சொல்கின்றார்:'அனைத்துமே வித்தியாசமாக இருக்கின்றன, முஹம்மதின் இயக்கத்தில்...! அங்கு பாசாங்கோ, விளங்காத புதிர்களோ இல்லை, மாறாக, பதியப்பட்ட வரலாறே தென்படுகின்றது...! அவருடைய புறவாழ்க்கை நமக்கு அந்நியமானதல்ல..! ஆனால், அவருடைய (முன்மாதிரியான) அகவாழ்க்கை அவருடைய பணி முழுமையடைந்த பிறகும் நிலைத்து நிற்கிறது'.

ஜான் டெவன் போர்ட்ஸ் என்பவர் தனது 'முஹம்மத் (ஸல்) மற்றும் திருக் குர்ஆனிடம் மன்னிப்பு' எனும் நூலில் 'இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையின் உண்மைத்தன்மை மற்றும் ஆதாரப்பூர்வமான நிகழ்வுகள் போன்று, ஒரு சிறு நிகழ்வோ அல்லது சம்பவமோ உலகின் எந்தவொரு நபருடைய வாழ்விலும் காண முடியவில்லை., காண முடியாது!' என்று ஒப்புக்கொள்கின்றார்.

ஆம்! அதுதான் உண்மை!

இவ்வாறு ஆன்மிகம்- உலகம், வீடுவாசல்- அரசியல்களம், அன்றாட சாதாரண நிகழ்வுகள்- அசாதாரணமான முடிவுகள், அமைதிக்கான சாதுர்யம்- போர்த்தந்திரம், வீரம்,விவேகம்- பொறுமை,சகிப்புத்தன்மை என்று வாழ்வின் அனைத்துத் துறைகள் தழுவிய அம்சங்களையும் வெற்றிகரமாகக் கையாண்டு தான் முழுமைப்படுத்திய கொள்கையை உலகில் ஐந்தில் ஒருவர் இன்றளவும் பின்பற்றும் வண்ணம் ஆற்றிய பெருமை இந்த மாமனிதரைத் தவிர வேறு எவருக்கும் இல்லை!


அதனால்தான் அவர் மாமனிதர்!

அகிலத்துக்கு ஓர் அருட்கொடை அண்ணலார் முஹம்மத் (ஸல்)அவரைப் பற்றி அறிந்து பின்பற்றுவது அனைவருடைய கடமை என்றால் அது மிகையல்ல!



ஆசிரியர்
amusavir@gmail.com

அறிவைத் தேடி - ஒருவன் அலைகின்ற போது, கவனவழியை அவனுக்கு சுலபப்படுத்துவான் இறைவன். -நபிமொழி




# இஸ்லாத்தைத் தோற்றுவித்தவரா முஹம்மத் (ஸல்)?



*இஸ்லாத்தின் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றி முஸ்லிம்கள்-முஸ்லிமல்லாதார் என இரு வகையினராலும், பல்வேறு நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன அவர்களைக் குறித்து பேசப்பட்டும் வருகின்றன. இவ்வாறு எழுதப்படுபவையும் பேசப்படுபவையும்-பெரும்பாலும் எழுத்தாளர்களும், பேச்சாளர்களும் முன்கூட்டியே கொண்ட அனுமானத்தின்-Preconditioning அடிப்படையில் அமைந்திருந்தன. அவர்கள் இஸ்லாத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களாகவோ அல்லது அதனை விமர்சிப்பவராகவோ இருப்பினும் சரியே! இஸ்லாத்தைக் குறை கூறுவோரைப் பொறுத்தவரை, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்தான் (யூத-கிறிஸ்தவ மதங்களை மூலாதாரமாகக் கொண்டு) இஸ்லாத்தைத் தோற்றுவித்தவர், இஸ்லாமிய அறிவுரைகளையும், திருக் குர்ஆனையும் முஹம்மத் (ஸல்) அவர்கள்தாம் உருவாக்கித் தந்தார்கள் என்று நம்புகின்றார்கள்.*

ஆனால், உண்மை என்ன? இதோ...!

எழுத்து



டாக்டர்
ஜமால் பதாவி

## யூத - கிறிஸ்தவ மதங்களை மூலாதாரமாகக் கொண்டதா இஸ்லாம்?

கீழைநாட்டு எழுத்தாளர்கள் - Orientalist மற்றும் கிறித்துவ சமய தொண்டூழியம் புரியும் அமைப்புகள் (Missionaries) இஸ்லாம் பற்றி பல குறிப்புகள் எழுதியுள்ளனர். முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு, யூதர்களுடனும், கிறித்துவர்களுடனும் தொடர்பு ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக, குறிப்பாக அவர் வணிகத்திற்காக மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களின்போது மதநம்பிக்கைகள் குறித்தும், இறைஇயல் பற்றியும் கற்றுக் கொண்டார் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்த அடிப்படை அறிவுதான் அவர் புதிய மதத்தைத் தோற்றுவிக்கச் செய்தது என்று அவர்கள் வாதிடுகின்றனர். "இஸ்லாத்தை தாம் உண்டாக்கவில்லை இறைவன் அறிவித்த இறைத்தூதின்படி பிறந்ததுதான் இஸ்லாம்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவதை ஏற்காமல் மறுத்தார்கள். அவர்மீது குற்றம் சுமத்தவே இவ்வாறு கூறுகிறார்கள் என்பது இதன் மூலம் தெளிவாக விளங்குகிறது. இந்தப் பிரச்னை குறித்து ஆழ்ந்து பார்ப்பது சுவையாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

இஸ்லாம் யூத கிறித்துவ மதங்களிலிருந்து பிறந்தது என்று கூறும் அன்பர்கள் யாரும், முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு மத அறிவூட்டிய அறிஞர்கள் அல்லது ஆசான்கள் யார் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலவில்லை. ஆக, இந்தக் கருத்து வெற்று வாதமே தவிர அடிப்படை உண்மைகள் கொண்டதல்ல!

இந்தப் பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னதாலும், பரவலாக்கப்பட்டதாலும், முஹம்மத் (ஸல்) பற்றி புனைந்து கூறப்பட்ட இந்தக் கருத்து நாளடைவில் பரந்த விளைவுடையதாக மாறிவிட்டது. ஆம்! அது 'உண்மையான தகவல்' போல் ஏற்கப்பட்டுவிட்டது, முடிவாகிப்போன ஒரு பிரச்னையாக ஒப்புக்கொள்ளப்பட்டது.[1]

அடிப்படை அறிவியல்பூர்வ ஆராய்ச்சி உணர்வுகளைப் புறக்கணித்து இத்தகைய அரைகுறை கருத்துகளை வெளியிட்டதற்கு ஒரு முன்மாதிரியாக மான்ட்கோமரி என்பவர் எழுதிய 'இஸ்லாமும் சமுதாய ஒருமைப்பாடும்' எனும் நூலை கூறுவார்கள். அதில் அவர் கூறுகிறார்: 'யூத கிறித்துவ மத மரபுகளின் செல்வாக்கு - தாக்கம், இஸ்லாம் தோன்றக் காரணமாக இருந்தது என்ற வரலாற்று ரீதியான உண்மையை இஸ்லாம் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும்".[2]


இதைப்பற்றி விமர்சித்த ஒரு வரலாற்று ஆசிரியர் எந்த விவாதமும் இல்லாமல், அலசி ஆராய்ந்து பாராமல், இஸ்லாம் மதத்தின் தோற்றம் பற்றி தீர்வு கண்டு அவர் முடிவு கூறியுள்ளார் எனக் குறிப்பிடுகிறார்.[3] முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் நேர்மை, உண்மை பற்றி நடுநிலையோடு விமர்சிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். அதன்பிறகு 'இஸ்லாம், யூத கிறித்துவ மதத்திலிருந்து தோன்றியது. இவ்விரு மதங்களின் தாக்கம்தான் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை தொடங்க காரணமாக இருந்தது" என்று கூறியிருந்தால் அது தர்க்க ரீதியான நியாயமான கூற்றாக இருக்கக் கூடும்.

பின்வரும் மூன்று வினாக்கள் இப்பிரச்னை குறித்து தெளிவாக விளக்கும்.

1. தமது 40ஆவது வயதில் - அப்புனித பணியைத் தொடங்கும் காலத்தில் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் குடும்பப் பின்னணி என்ன? கல்வித் தகுதி என்ன? அவர் கொண்டு வந்த இறைத்தூது பற்றிய விஷயத்தில் இப்பின்னணி எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும்?

2. யூதர்களுடன், கிறித்துவர்களுடன் எந்த அளவுக்கு தொடர்பு இருந்தது? எந்த அளவுக்கு அவர் அறிவித்த (இஸ்லாம் பற்றிய) கொள்கைக்கு இந்த உறவு பயனளித்தது?

3. பகுத்தாய்ந்து பார்த்தால் எந்த அளவுக்கு முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் அறிவுரைகளில் யூத, கிறித்துவ மத கருத்துகள் தென்படுகின்றன? அப்படியே இந்த இரண்டு மத போதனைகளுக்கிடையில் ஒத்த அம்சங்கள் கருத்துக்கள் இருப்பின் அவை எப்படி விளக்கப்பட வேண்டும்?






### அ) பின்னணி பற்றிய கேள்வி

வரலாற்று ரீதியாகப் பார்த்தால் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர். அவருக்கு எழுதவோ, படிக்கவோ தெரியும் என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. இறைவனின் வார்த்தைகள் என அவர் கூறிய திருக்குர்ஆன் கூட, அவரால் எழுதப்படவில்லை. அவர் சொல்லச் சொல்ல, இந்த இறையருள் வெளிப்பாட்டு செய்தி-திருக்குர்ஆன்-படியெடுக்கும் எழுத்தர்களால் எழுதப்பட்டு மனனம் செய்யப்பட்டது.

இன்னும் ஒரு வரலாற்றுச் சான்று உள்ளது. இஸ்லாத்தை ஏற்றுக்கெள்ளுமாறு எகிப்து நாட்டு மன்னருக்கு, முஹம்மத் நபி (ஸல்) அவர்களால் அனுப்பப்பட்ட கடிதம். இந்த கடிதம் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்காக எழுதப்பட்டு, அவருடைய கையொப்பத்துக்குப் பதிலாக, அவரது மோதிர முத்திரை மட்டுமே பதிக்கப்பட்டது.

மதச்சார்பற்ற கல்வியோ, அல்லது வேறுவகைக் கல்வியோ முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கற்கவில்லை. மேலும், திருக்குர்ஆன் குறிப்பிடும் பல்வேறு விஷயங்கள் பற்றி அவர் ஆர்வங் கொண்டு பேசி அவற்றில் பாண்டித்யம் அடைந்து, சாதனைகள் புரிந்ததாகவோ, அல்லது 40ஆம் வயது வரையில் அறிஞர்கள் வியக்கும் நிகழ்ச்சிகள் எதுவும் அவரது வாழ்வில் நிகழ்ந்ததாகவோ, எந்தத் தகவலோ சான்றோ இல்லை.

எழுத்தறிவில்லாத மனிதர் திடீரென்று தமது 40ஆம் வயதில் வரலாற்றின் போக்கையே மாற்றியமைக்கும் வகையில், ஒரு மதப் புரட்சியை-மரபுப் புரட்சியை எப்படி ஏற்படுத்த முடியும்?

### ஆ) சூழல் பற்றிய கேள்வி

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் யூத-கிறித்துவ மதக் கருத்துகளை எந்த அளவு புரிந்து கொண்டார்? எந்த அளவு உள்வாங்க முடிந்தது? என்பதை அறிய அவரது பின்னணிச் சூழலையும் அறிய வேண்டும். நாகரிகம் மற்றும் கல்வியின் கேந்திரமாக விளங்கிய எகிப்து நாட்டின் சூழலில் வளர்க்கப்பட்ட மோசஸ் (மூஸா (அலை)) அவர்களைப் போல் அல்லாமல், ரோம ஆதிக்கத்திலிருந்த பாலஸ்தீனத்தில் வளர்க்கப்பட்ட ஏசுநாதர் (ஈசா (அலை)) அவர்களைப் போல் அல்லாமல், அல்லது யூதர்களிடையே நாயகர்களாக விளங்கிய, (இஸ்ரவேலர்களின்) பிற தீர்க்கதரிசிகளைப் போல் அல்லாமல், மதத் தலைவர்களின் படித்தரத்தில்[5] அல்லாமல், எம்மதத்தையும் சாராத, சமய சிந்தனை அறவே இல்லாத காட்டரபிகள் மிகுந்துள்ள அரபகத்தில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு யூதர்களோ, கிறித்துவர்களோ வாழாத பகுதியில் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் வளர்ந்தார்கள்.

யத்ரீபில் (மதீனாவில்) யூத கோத்திரங்கள் சில வாழ்ந்து வந்தன. ஆனால், முஹம்மத் (ஸல்) பிறந்த இடத்திலிருந்து மதீனா வெகு தொலைவிலுள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நிலவிய போக்குவரத்து வசதிகள், தகவல் தொடர்பு வசதிகளை வைத்துப் பார்கும்போது முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தாம் பிறந்த இடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள மதீனா வாழ் யூதர்களிடமிருந்து தாக்கம் பெற்றிருக்க முடியும் என்பது சிந்தனைக்கு அப்பாற்பட்ட விஷயம்!

பாலைவன வணிகக் குழுவினருடன், பிற நாடுகளுக்குப் பயணம் சென்று வந்ததன் காரணமாக, யூத, கிறித்துவ மதங்களைப் பற்றி முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் அறிந்திருக்கக் கூடும் என்று சிலர் வாதிடலாம். இது சாத்தியமா, இல்லையா என்பதல்ல இதில் உள்ள அபாயம்! ஆழமாக ஆராய்ந்து பார்க்காமல், மேலோட்டமாக இதனடிப்படையில் முடிவு மேறகொள்ளப் பட்டிருக்கிறது என்பதுதான் இதில் உள்ள அபாயகரமான உண்மை!

*ஆய்வு அடுத்த இதழிலும் தொடரும், இறைவன் நாடினால்.!*

*செயல்கள் விளைதக்கப்படுவதும்,
பயன்கள் அறுவடை செய்யப்படுவதும்,
எண்ணங்களாலே..! -நபிமொழி*


1.பார்க்க: திபவீ, ஏ.எல். இங்லிஷ் ஸ்பீகிங் ஓரியண்டலிஸ்ட், தி இஸ்லாமிக் சென்டர், ஜெனீவா, ஸ்விடசர்லாந்து, 1965, பக்கம். 17 ௨. பார்க்க: வாட், டபிள்யூ, மானடோகோமரி, Islam are the integration of society, இலண்டன் 1961, பக்கம் ௨63, மேலும் திபவீ, பக்கம் ௨௨.
3. தபவீ, பக்கம்.௨௨ 4. இந்த ஆவணம் "நியூஸ் லெட்டர், தி முஸ்லிம் ஸ்டூடண்ட்ஸ் அசோசியேஷன் ஆப் தி யு.எஸ். அண்ட் கனடா, தொகுதி 5, எண்:3, ஜனவரி 1971, பக்கம் 10இல் மறுபிரசுரம் செய்யப்பட்டது. 5. இந்த அடிப்படை கருத்துகள் இறைத் தூதர்களான மூஸா (அலை), ஈஸா (அலை) ஆகியோருக்குக் கிடைத்த இறை செய்திகளை மறுப்பதற்கு துணை போவதில்லை. அதேபோல், அண்ணலார் (ஸல்) அவர்களின் தூதுத்துவம் குறித்து மறைப்பதற்கும் துணை போவதில்லை. பார்க்க: ஜோமா, பக்கம் 547-549

முஹம்மத் (ஸல்) சிறப்பிதழ்

சிறப்புக் கட்டுரை

# அறிவியலையே அசர வைத்த அறிஞன்

எழுத்து
மு.அ. அப்துல் முஸவ்விர்





நாளொரு புதிய ஆய்வுகளும், பொழுதொரு கண்டுபிடிப்புகளுமாக, இன்றைய நவீன உலகம் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது. நேற்றைய அறிவியல் கற்பனைகள் இன்றைய ஆய்வுகளாகவும் நாளைய உண்மைகளாகவும் மாறிக் கொண்டிருக்கின்றன. எனினும் மனிதனின் பகுத்தறிவுக்கு மீறிய ஒரு ஆற்றல் இருப்பதை இந்த உலகம் ஒப்புக்கொள்ளும் வகையில் அனைத்துலகின் அதிபதியாகிய இறைவன் தனது தூதர்களை அனைத்துக் காலங்களிலும் ஒவ்வொரு சமூகத்தினரிடையேயும் அனுப்பி வைத்தான். அவர்கள் மனிதர்களே அன்றி தேவர்களோ, அரக்கர்களோ அல்லது அவதாரங்களோ அல்லர்.

எனினும் அந்தத் தூதர்கள் சாதாரண மனிதர்களிடமிருந்து ஒருசில அம்சங்களில் வேறுபட்டு நின்றனர். குறிப்பாக, மற்ற மனிதர்களால் செய்ய முடியாத சில அதிசயங்களை இறையருளால் செய்துகாட்டினார்கள். இறைத்தூதர்கள் பலருக்கும் இறைவன் வழங்கியிருந்த இந்த அதிசயங்கள், ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்ததாக இருந்தது. உதாரணமாக, மூஸா (அலை) அவர்களுடைய காலத்தில் மந்திர-தந்திரக்காரர்களின் கை ஓங்கியிருந்த காரணத்தினால், இறைவன் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் வகையில் மூஸா (அலை) அவர்களுக்கு பாம்பாக மாறக்கூடிய கோலை அதிசயமாக வழங்கியிருந்தான். அதேபோன்று, ஈஸா (அலை) காலத்தில் மருத்துவம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் மீது தாக்கம் செலுத்தும் வகையில் இறந்தவர்களை உயிர்ப்பித்தல், குருடர்களைக் குணமாக்குதல் போன்ற அதிசயங்களை வழங்கினான்.

இந்த வரிசையில் இறுதியாக வந்த முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அதிசயங்கள் கிடடியிருந்தன. பொதுவாக அந்த அதிசயங்கள் இரண்டு வகைகளாக இருந்தன.

1. Theoritical – தத்துவ ரீதியான, செயல்படுத்தப்பட வேண்டிய செயல் குறிப்புகள்
2. Practical – செயல்முறையில் உண்மையானவை

முதல் வகைக்கு உதாரணம். திருக் குர்ஆன்! மனிதர்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியவற்றைக் குறித்து எழுதப்படிக்கத் தெரியாத தனது தூதர் மீது இதனை இறக்கி வைத்தான் ஏகஇறைவன். அரபிமொழி பண்டிதரும் வியக்கத்தக்க, அதுபோல் ஒன்றைக் கொண்டுவர இயலாத மாபெரும் அதிசயம் அது.

இரண்டாம் வகை செயல்முறையில் நிரூபிக்கப்பட்ட அதிசயங்கள் பல இருப்பினும் இன்றைய நவீன உலகம் பிரமித்துப்போய் நின்று தானே அதனை ஒப்புக்கொள்ளும் வகையிலான விஷயத்தைக் கூறுவது சாலப் பொருந்தும். அவற்றில் குறிப்பாக சந்திரனை இரண்டாகப் பிளந்த சம்பவத்தைக் கூறலாம். அண்ணலார் (ஸல்) அவர்கள் தூதராக அனுப்பப்பட்டதை ஒப்புக்கொள்ள அவரை ஏதேனும் அதிசயம் நிகழ்த்திக் காட்டுமாறு அவருடைய குலமக்கள் கேட்டனர். அப்போது அண்ணலார் அவர்கள் நேரடியாக சந்திரனை நோக்கி விரலை நீட்டி, இறையருளால் அதனை இரண்டாகப் பிளந்து காட்டினார். அந்தப் பிளவினூடே மக்கள் (மக்கத்து) ஹிரா மலையைக் கண்டனர். அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் ஆதாரம்: புகாரி, தொகுப்பு 5, நூல் 58, எண் 208. இதைப் போன்று பல்வேறு ஆதாரப்பூர்வமான வரலாற்றுப் பதிவுகள் இச்சம்பவத்தை உறுதிப்படுத்துகின்றன.

அண்ணலார் (ஸல்) அவர்களின் இந்த சந்திரப் பிளவு அதிசயம் உண்மையா? நிருபிக்கபப்ட்டதா? அறிவியல் என்ன கூறுகின்றது?

நீல் ஆம்ஸ்ட்ராங் என்பவர் முதன் முதலில் சந்திரனில் காலடி வைத்தவர் என்பது அனைவரும் அறிந்ததே! ஆதன் பிறகு சந்திரன் பற்றிய ஆய்வுகள் சூடுபிடிக்கத் துவங்கிவிட்டன. ஒருமறை BBC தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் 3 அமெரிக்க வானவியல் விஞ்ஞானிகளின் பேட்டி ஒளிபரப்பானது. சந்திரமண்டலத்தின் மீதான ஆய்வின் முக்கியத்துவம் குறித்து பேட்டியளித்துக் கொண்டிருந்தனர். உலகின் பெரும்பகுதிகளில் வறுமையால் மக்கள் வாடிக்கொண்டிருக்க கோடிக்கணக்கான டாலர்கள் செலவழித்து ஆய்வுகள் தேவையா என்று அந்த நிகழ்ச்சியாளர் கிடுக்கிப்பிடி கேள்விகள் கேட்டும் சந்திரமண்டலத்தின் ஆய்வு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையே அவர்கள் வலியுறுத்தினர். தங்களுடைய ஆய்வு வீண் போகவில்லை என்பதற்கு வலு சேர்க்கும் வகையில் சந்திரனில் அறியப்பட்ட புதிய விஷயத்தைக் கூறினர். சந்திரனில் மேற்புறத்திலிருந்து அதன் வல்ப்புற ஆழ் உட்பகுதி வரை நீளக்கூடிய ஒருவித கடினசுவர் Belt of Rocks இருப்பதைக் கண்டனர்.

இது குறித்து மேலும் அறிய வானவியலாளர்களிடம் ஆலோசித்தபோது இந்த ஆச்சர்யத்துக்கு மேலும் உரம் சேர்க்கும்வகையில் நிச்சயமாக சந்திரனில் ஏதேனுமொரு பிளவு ஏற்பட்டிருந்தாலே தவிர இத்தகைய ஈகடின சுவர்» உருவாக சாத்தியமில்லை என்று தெரிய வந்தது. அதாவது, சந்திரன் பிளவுபட்ட அடையாளமே அது என்று தெரிவித்தனர். சந்திரன் பிளந்து, அதன் இரு பிளவுகள் மீண்டும் இணைந்ததால்தான் ஏற்பட்டதே இந்த நிலை! எளிய வார்த்தைகளில் கூறினால் அறுவை சிகிச்சை முடிந்த பிறகு அந்த பகுதிகளில் ஏற்படும் கடின தழும்பைப் போன்றதே இது!

மேற்கண்ட நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த தாவூத் மூஸா என்பவர் (பின்னர் பிரிட்டிஷ் முஸ்லிம் கட்சியின் தலைவராக ஆனார்) தன் இருக்கையிலிருந்து துள்ளிக் குதித்தார். முன்னர் ஒருமுறை இந்த சம்பவம் குறித்து பேசும் திருக் குர்ஆன் வசனத்தை தான் கிண்டலடித்ததை நினைவுகூர்ந்தார். உடனே அந்த வசனத்தை எடுத்து மறுபடியும் படித்தார். இறைவழிகாட்டுதலை ஏற்றார். பின்னர் ஒருமுறை இது சம்பந்தப்பட்ட உரையில் "பைசா செலவில்லாலாமல் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறையருகால் நிகழ்த்திக் காட்டிய சம்பவத்தை இன்று அமெரிக்கா பில்லியன் டாலர்களை செலவழித்து கண்டுபிடித்திருக்கின்றது. நம்பிக்கையுடன் அண்ணலார் (ஸல்) அவர்கள் இறைத்தூதர் என்று ஏற்றுக்கொண்டிருந்தாலே போதுமானது!» என்று புளங்காகிதத்துடன் பேசினார்.
இனி நிதர்சன உண்மைக்கு வருவோம்!

இதுபோன்ற அனைத்து விஷயங்களையும் குறித்து இந்த உலகம் அறிய வரும்போது எண்ணிலடங்கா பொருளாதாரத்தை வீணடித்திருக்கும். இன்று சந்திரப் பிளவை அடிப்படையாக வைத்து முஹம்மமத் (ஸல்) ஒரு விஞ்ஞானி என்றோ, வித்தைக்காரர் என்றோ கருதலாம் என்று பொருளல்ல! ஏனெனில், வித்தைகள், நிரந்தரமானதொரு விளைவில் நிற்கக்கூடியவை என வாதிட முடியாது.

ஒரு காலத்தில் பூமி குறித்த கலிலியோ-வின் கருத்தை ஏற்றுக்கொள்ளாது, கிறித்துவ மதகுருமார்கள் குழு தண்டனை அறிவித்தது. ஆனால், ஆண்டுகள் பல கடந்து கலிலியோவின் கூற்றே உண்மை என்றானது. பூமி உருண்டை என்று ஆய்வாளர் கலிலியோ கூறியது ஏற்கனவே இருந்த அனுமான இயற்கை அடிப்படையில்! ஆனால், எழுதப் படிக்கத் தெரியாத முஹம்மத் (ஸல்) அவர்களின் செயல் ஏற்கனவே இருந்த இயற்கையான ஒன்றின் அனுமானமல்ல! மாறாக, இயற்கையாக இருந்த ஒன்றின் மீது மாற்றம் கொண்டு வந்து தனது இறைத்தூதுத்துவ வாதத்தை நிரூபித்த ஒன்று. எனவே இவருடைய அதிசயம், நிரந்தர அறிவியல் உண்மையாக நிரூபணமாகியிருப்பது வித்தையோ அனுமானத்தின் அதிர்ஷ்டமோ அல்ல! மாறாக, அந்த அறிவியலின் உண்மை நாயகனும் அதனை செய்து காட்டிய முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அத்தகைய ஆற்றலை வழங்கியவனுமாகிய ஏகஇறைவனின் இணையில்லா அருளுமே இந்த அதிசயத்துக்கு காரணமாகும்.

ஒருவேளை அமெரிக்கா இந்த சந்திரப் பிளவை கண்டுபிடித்திருக்காவிட்டாலும் அண்ணலார் (ஸல்) அவர்களின் மீதும் அவருடைய இந்த மாபெரும் அதிசயத்தின் மீதும் எந்தவொரு சந்தேகப் பார்வையையும் எப்போதும் செலுத்தமாட்டார்கள், இறைநம்பிக்கையாளர்கள்! ஆனால், உலகத்தாரைப் பொறுத்தவரையில், இத்தகைய அறிவியல் உண்மைகள் அறுதியிட்டு உறுதி கூறப்பட்ட பின்னராவது, அண்ணலார் (ஸல்) அவர்களின் இறுதித் தூதுத்துவ வாதம் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறதே அன்றி வேறு வாய்ப்புக்கு இடமில்லை!

ஆம்! அறிவியலையே அசத்திவிட்ட இந்த அறிஞனின் முடிசூடா மகாத்மியத்தை உலகம் முழுவதும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டிய நாள் வெகு தொலைவில் இல்லை! அதற்கு ஒரு சிறிய முன்னோட்டமே சந்திரப்பிளவின் ஊர்ஜித முன்னோட்டம்! ■

> உண்மை வீரம், கொந்தளிக்கும் கோபத்திற்கு நீ கடிவாளமிடும் போதே, சமரில் நீ வாள் கொண்டு சாத்துவதில்லை..! -நபிமொழி

சிறப்புக் கட்டுரை



# அகிலத்துக்கோர் அருட்கொடை!

எழுத்து



என்.எம்.எம். ஹுஸைன்

மனித வாழ்க்கை என்ற அகராதியைப் புரட்டும்போது இறைவன், வணக்க-வழிபாடு, மார்க்கம் ஆகியன தவிர்க்கப்பட முடியாதவைகளாகக் காணப்படுகின்றன. அதற்குப் பல்வேறு காரணிகளை முன்வைக்கலாம்.

### 1. இயற்கையான இறையுணர்வு :

மனிதனை மிகச் சரியான வடிவில் அமைத்திட்ட இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

“நான் ஜின்களையும் மனிதர்களையும் எனக்கு அடிபணிய வேண்டும் என்பதற்காகவேயன்றி வேறு எதற்காகவும் படைக்கவில்லை”
(திருக் குர்ஆன் **51 : 56**)

(அதாவது, மற்றவர்களுக்கு அடிபணிவதற்காக அவர்களை நான் படைக்கவில்லை, மாறாக, எனக்கே அடிபணிந்து வாழ்வதற்காகத்தான் அவர்களைப்படைத்துள்ளேன்)

இப்பிரபஞ்சத்தைப் படைத்து ஆளும் வியத்தகு ஆற்றலொன்று இருக்கிறது. அந்த ஆற்றலுக்கு மட்டுமே அடிபணிய வேண்டும் எனும் உணர்வை ஒவ்வொரு மனித உள்ளத்திலும் இருத்தியே படைத்துள்ளான், ஏகஇறைவன்!

அந்த ஆற்றல் எது?


இறைவழிகாட்டல் உள்ளங்கை நெல்லிக்கனி போல காட்டுகின்றது. மனிதன் இறைவழிகாட்டலைப் பின்பற்றும் போது இறைவனைப் புரிந்து கொண்டு அவனுக்கு அடிமைப்படுகிறான். இறைவழிகாட்டலை நிராகரித்து மனோஇச்சைகளைப் பின்பற்றும் போது இறைவனுக்கு மாற்றமாக சாத்தானிய சக்திகளுக்கு அடிமைப்பட்டு வழிகேட்டில் வீழ்ந்து போகின்றான்.

### 2. பிரபஞ்ச நியதிகள் :

இப்பிரபஞ்சத்தை உற்றுநோக்கும் ஒரு மனிதன் அதில் காணப்படும் மிக நுணுக்கமான, நேர்த்தியான, அற்புதமான நியதிகளைக் கண்டு வியப்படையாமலிருக்க முடியாது. இறைமறை திருக்குர்ஆனில் இறைவன் இவ்வாறு குறிப்பிடுகிறான் :

“உங்கள் இறைவன் ஒரே இறைவன் தான், அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடையோனாகிய அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை, (இந்த உண்மையை அறிந்து கொள்ள சான்று வேண்டுமாயின்) வானங்கள், பூமி ஆகியவற்றின் ஒழுங்கமைப்பிலும், இரவும், பகலும் ஒன்றன் பின் ஒன்றாக மாறி மாறி வருவதிலும், மக்களுக்கு பயன் தரக்கூடியவற்றைச் சுமந்து கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும், மேலிருந்து அல்லாஹ் இறக்கி வைக்கும் மழை நீரிலும், பின்னர் அதைக்கொண்டு பூமியை –அது இறந்து போன பின்னரும் கூட உயிர்ப்பித்து மேலும் (தனது இந்த ஏற்பாட்டின் மூலம்) அதில் எல்லாவிதமான உயிரினங்களையும் பரவச் செய்திருப்பதிலும், காற்றுகளை சுழலச் செய்வதிலும், வானங்களுக்கும் பூமிக்கும் இடையே கட்டுப்படுத்தப்பட்ட மேகங்களிலும், சிந்திக்கும் மக்களுக்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. (ஆனால் இறைவன் ஒருவனே என்பதைத் தெளிவு படுத்தும் இத்தகைய தெளிவான சான்றுகள் இருந்தும்) மனிதர்களில் சிலர், அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களையும் (அவனுக்கு) நிகரானவர்களாய் ஆக்கிக் கொள்கிறார்கள்.....”
(திருக் குர்ஆன் 2:164 – 165)

எனவே இத்தகைய மாபெரும் வியப்புக்கும், ஆற்றல்களுக்கும் உரியவனான இப்பிரபஞ்சப் படைப்பாளனுக்கு அடிபணிந்து, வணங்கி, வழிபட்டு வாழவேண்டும் எனும் முடிவுக்கு மனிதன் வருகிறான். இங்கும் இறைவழிகாட்டலின் உதவி தேவைப்படுகிறது. இறைவழிகாட்டலை ஏற்றுப் பின்பற்றும் போது உண்மையான படைப்பாளனைப் புரிந்து அவன் வகுத்துள்ள நேர்வழியில் செல்ல முடிகிறது. அதற்கு மாற்றமாக இறைவழிகாட்டலைப் புறக்கணிக்கும் போது சாத்தானிய ஆற்றல்கள் அந்த மனிதனை வழிகேட்டை நோக்கி அழைத்துச் சென்று போலியான கடவுள்களை அறிமுகம் செய்து மனித வாழ்வை இருள் சூழ்ந்ததாக மாற்றி விடுகின்றன!



### 3. மறுமையுணர்வு

மேலும் இப் பிரபஞ்சத்தை சரியான கோணத்தில் ஒரு மனிதன் கண்ணுறுவானேயானால், அதில் எதுவுமே வீணுக்காக படைக்கப்பட்டிருக்கவில்லை பேருண்மையை உணர்ந்து கொள்கிறான். எதுவுமே வீணுக்காக அல்ல எனும் போது அவனுடைய செயல்கள் மட்டும் (அது நன்மையோ, தீமையோ) வீணாகிவிடப் போவதில்லை. நிச்சயமாக நன்மைக்குக் கூலியும் தீமைக்கு தண்டனையும் இருக்க வேண்டும் எனும் நியதியை உணர்கிறான்.

அவ்வாறு நற்கூலியும், தண்டனையும் வழங்கக் கூடிய பேராற்றல் ஒன்று இருக்க வேண்டும், ஆற்றலுக்கு தன்னை அடிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் எனும் உணர்வு மனித உள்ளத்தில் ஊற்றெடுக்கிறது. இங்கும் இறைவழிகாட்டலின் தேவை இன்றியமையாததாகும். அதனை ஏற்றுப் பின்பற்றும் போது அந்தப் பேராற்றலை சரியாக இனங்கண்டு அவனுக்குக் கட்டுப்பட முடியும். இறைவழிகாட்டலைப் புறக்கணிக்கும் போது சாத்தானிய சக்திகள் துணைக்கு வருகின்றன. வழிகேட்டுக்கு அவனை இட்டுச் செல்கின்றன, போலிக்கடவுள்களை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைக்கின்றன. மனிதனை இம்மையிலும் மறுமையிலும் பேரிழப்பில் ஆழ்த்தி விடுகின்றன.

எனவே மனிதன் எந்த இயல்பு நிலையில் படைக்கப்பட்டிருக்கிறானோ அதே இயல்பு நிலையில் இறைவனைப் புரிந்துகொள்ள இறைவழிகாட்டல் தேவைப்படுகிறது. அதனால்தான் மனிதனைப் படைத்த இறைவன் மனித வாழ்க்கைக்கான வழிகாட்டலையும் கூடவே வழங்கியிருக்கிறான்.

இது பற்றி இறைவன் தனது திருமறையில் குறிப்பிடுகின்ற போது :

“(நபியே!) நீர் எச்சரிக்கை செய்பவர் மட்டுமே ஆவீர். நாமே உம்மை நற்செய்தி சொல்பவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும் நியமித்து, சத்தியத்துடன் அனுப்பியுள்ளோம். மேலும், எச்சரிக்கை செய்பவர் எவரும் வருகை தராமல் எந்தச் சமுதாயமும் இருந்ததில்லை” (திருக் குர்ஆன் 35:33 – 34)

அருட்கொடையான அந்த இறைத்தூதர் பற்றி.... *அடுத்த இதழிலும் தொடரும், இறைவன் நாடினால்.!*

## நபிகளாரைக் குறிக்க (ஸல்) ஏன்?

நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பெயரைக் குறிப்பிடும் போது அடைப்புக்குறிக்குள் (ஸல்) என்ற சொற்பிரயோகம் ஏன் பயன்படுத்தப்படுகிறது? என்பது பொதுவாகவே முஸ்லிம் அல்லாத சகோதர-சகொதரிகளுக்கு மத்தியில் புரியாத புதிராகவே காணப்படுகிறது எனவே வசந்தத்தின் ஊடாக அந்தப் புதிரைப் புரிய வைக்க முனைகிறோம்.

‘ஸல்லல்லாஹு’ அலைஹி வஸல்லம்’ என்ற நீண்ட வசனத்தின் சுருக்க வடிவமே இந்த (ஸல்) என்பதனை முதலில் விளங்கிக் கொள்வோம்.

அடுத்து இவ்வசனத்தின் கருத்தை ஒவ்வொரு சொல்லாக விளங்க முயற்சிப்போம் :

அரபி மொழியில் ‘ஸல்லா’ என்றால் நல்வாழ்த்து சொன்னான் என்பது பொருளாகும். (இச்சொல்லுக்கு தொழுதான் என்ற கருத்தும் உள்ளது)

‘ஸல்லல்லாஹு’ஹ என்றால் ‘அல்லாஹ் நல்வாழ்த்துச் சொன்னான்’ எனப் பொருள்படும்.

‘அலைஹி’ என்றால் அவர்மீது என்பதாகும்.

‘வ’ என்றால் ‘மேலும்’என்று கருத்துப்படும்.

‘ஸல்லம’ என்றால் ஆபத்துக்கள் மற்றும் குறைகளிலிருந்து அல்லாஹ் பாதுகாத்தான் என்பதாகும். (இதற்கு ஸலாம் சொன்னான் என்ற கருத்தும் உள்ளது) இனி முழுமையான கருத்தை நோக்குமிடத்து “அவர் (நபி முஹம்மத்) மீது அல்லாஹ் நல்வாழ்த்துச் சொன்னான், மேலும் ஆபத்துக்கள் குறைகளை விட்டும் அவரைப் பாதுகாத்தான்” என்பதாக அமைகிறது.

எனவே தனக்குப் பிரியமான நபியின் பெயரைக் கூறும் போதெல்லாம் இந்த இறை வாழ்த்தையும் சேர்த்துச் சொல்லுமாறு இறைவன் பணிக்கிறான். திருக் குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது :

“அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் நபியின் மீது ஸலவாத் எனும் நல்வாழ்த்துக்களை அனுப்புகின்றார்கள். நம்பிக்கை கொண்டவர்களே! அவர் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள்” (அத் 33 : 56)

இந்த அடிப்படையில் தான் நபி முஹம்மத் அவர்களின் பெயருக்குப்பின் சுருக்கமாக (ஸல்) என குறிப்பிடப்படுகிறது.

*வெட்க உணர்வு கூட இறைநம்பிக்கையின் ஒரு அங்கமே!*
*-நபிமொழி*



குவைத்தில்
**Dr. Zakir Naik**

# ஆத்மானந்த உணர்வுகளை எம் உள்ளங்களில் விழுக்காடின்றி விதைத்தாய்..!

பிப்ரவரி 29, குவைத் கண்டது மனித பூகம்பத்தை! மையம் கொண்டது அப்பாஸியா, சுற்றுலாப் பூங்காவில்!

பீரங்கியிலிருந்து வரும் குண்டுமழையா, மலையிலிருந்து பொழியும் நீரருவியா என்று வியக்கும் அளவுக்கு சொல்லருவியாய் வந்து விழும் ஆத்மானந்த விளக்கங்கள்..!
வில்லிலிருந்து குறிபார்த்து எய்தப்பட்ட அம்பு போல் விளக்கக் கணைகள்..!! வினா தொடுத்தவருக்கு இரண்டாவது வாய்ப்பு இல்லாது போகுமளவுக்கு நெத்தியடி பதில்கள்..!!! மனிதமூளையா..? பெண்டியம் 5-க்களை குழைத்தெடுத்த இஸ்லாமிய ரோபோவா..? ஆயிரக்கணக்கான தலைகள் ஆச்சர்யப்படும் ஒரே தலை..!

உலகின் இரண்டாவது மிகச்சிறந்த நாவலர், மேடைப்பேச்சுத் திறமையாளர், சொல்வன்மை சொற்பொழிவாளர்! மதஒப்புமை ஆய்வாளர், இஸ்லாமிய உலகின் சொல்வாள் செம்மல் டாக்டர். ஜாகிர் நாயக் - அவர்களின் குவைத் சுற்றுப்பயணம் வரலாறு காணாத எழுச்சியை ஏற்படுத்திவிட்டது. கலைநிகழ்ச்சிகளுக்கும், கண்கவர் களியாட்டங்களுக்கும் மட்டுமே கூட்டம் கூடும் என்பதை பொய்யாக்கிக் காட்டினார், சத்தியப் பேரொளியைப் பரப்ப தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இந்த பேரறிவாளன்.

*தேசிய, வண்ண, மொழி, வயது வேறுபாடு இன்றி புற்றீசல் போல் கூடி புளங்காகிதம் அடையும் புலமகள் கூட்டம்!*



பிப்ரவரி 28, வியாழன் இரவு நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட பலதரப்பட்ட கேள்விகளுக்கும் தனக்கேயுரிய பாணியில் நிதானமாகவும் விளக்கமாகவும் பதிலளித்தார். உணவு இடைவேளையின்போது, அவருடன் பேச கிடைத்த 10 நிமிடங்கள் சந்திப்பில், "மேற்கோள் மேகங்கள் அவர் வான்மூளையில் கிஞ்சுற்றும் பிசகாமல் மழையாய் பொழிவது எப்படி?" என்று வினவினேன். தனக்கேயுரிய அடக்கத்துடன், நர்த்தனம் புரியும் நாவன்மையுடன் நிதானமாகக் கூறினார்: 'நான் தேவையற்ற-வீண் விஷயங்களை என் மூளையில் பதியச் செய்வதில்லை; எனவே, தேவையான நல்ல விஷயங்கள் இறையருளால் தாமாகவே என் மூளையில் பதிந்துவிடுகின்றன!"

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், குவைத் மற்றும் சில மேலைநாடுகளைச் சேர்ந்த ஏறக்குறைய 18,000-க்கும் அதிகமான ஆண்களும் பெண்களும் (பெண்கள் மட்டும் ஏறக்குறைய 3,000 பேர்) கலந்துகொண்ட மாபெரும் பொதுக்கூட்டம் பிப்ரவரி 29 அன்று இரவு நடைபெற்றது. 'பெரும்பான்மை மதங்களில் இறைவனைப் பற்றிய கருத்தோட்டம்" எனும் தலைப்பில் நடைபெற்ற அக்கூட்டத்தை துவக்கி வைத்து உரை நிகழ்த்திய குவைத்துக்கான இந்திய தூதர் திரு. எம். கணபதி, 'மதங்களுக்கிடையே ஆக்கபூர்வமான சொல்லாடல் நிகழ்வதை ஊக்குவிக்கும் இந்த இளம் மருத்துவரும், அவரை அழைத்து இந்த மாபெரும் விழாவுக்கு ஏற்பாடு செய்த இஸ்லாமிய நிலையத்தையும் பாராட்டுகின்றேன். நன்மையான அடிப்படை விஷயங்களைக் கடைப்பிடிப்பதில் தீவிரமாக இருப்பதில் தவறில்லை; ஏனெனில், பெரும்பான்மை மதங்கள் மனிதரிடையே நன்மையையே போதிக்கின்றன" என்று கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட குவைத் பல்கலைக்கழக, மார்க்க சட்டத்துறை முதல்வரும் இஸ்லாமிய நிலைய திட்டத்துறைத் தலைவருமான டாக்டர். முஹம்மத் அல்-தப்தபாஈ அவர்கள் தனது சிறப்புரையில், 'குவைத்தின் இன்றைய வளர்ச்சிக்கு இந்தியர் உள்ளிட்ட அந்நிய தேசத்தவரின் பங்கு மறுக்க முடியாதது. எமது முன்னோர்கள் ஒரு காலத்தில் வணிக நிமித்தமாக இந்தியாவுக்கு சென்று வருகையில், இந்தியர்கள் தந்த விருந்தோம்பலை நாங்கள் நன்றியுடன் நினைவுகூருகின்றோம். அத்தகைய ஒரு சகோதரத்துவமான தேசத்திலிருந்து சத்தியநெறியை ஆக்கபூர்வமான முறையில் பரப்ப தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இந்த இளம் அறிவாளியை வரவேற்பதில் பெருமை கொள்கின்றேன். மக்களிடையே சத்தியத்தையும் அழகிய பொறுமையையும் பரப்புவது ஒவ்வொரு முஸ்லிமுடைய கடமை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது" என்றார்.




*பத்திரிகையாளர் சந்திப்பில்*

விண்ணதிரும் பலத்த கைதட்டல்களுக்கிடையே உரையாற்றிய, விழா நாயகன் தமது உரையில் இந்து, கிறித்துவம், சீக்கியம், ஜைனம், பார்ஸி உள்ளிட்ட மதங்களில் 'இறைவனைப் பற்றிய கருத்தோட்டம்" என்னவென்பதை



*டாக்டர். நாயக்-குடன் IPC சஞ்சிகைகளான நளவன்கா -தெலுங்கு (இடது) மற்றும் வசந்தம் - தமிழ் (வலது) ஆசிரியர்கள்*

*தெளிவான விடைகள்*

*கலைநிகழ்ச்சிக்கு வந்த கலக்கல் கூட்டம் அல்ல இது, இருமை வெற்றிக்கு கட்டியம் கூற வந்த விஜயக்கூட்டம்*



பார்த்து வாசித்தும் பைபிள் பிழைகள்..! :.பாதரிடமிருந்து...!!





அக்குவேறு ஆணிவேறாகப் புட்டு வைத்தார். இறுதியில் இறைவேதத்தைக் கையில் ஏந்தியபடி இஸ்லாம் கூறும் ஏகத்துவம் மட்டுமே ஏன் உண்மையானது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளும் வகையில் நேர்மையாகப் நிரூபித்தார்.

பின்னர் முஸ்லிம் அல்லாத மக்களிடமிருந்தும் அவர்கள் சார்பாகவும் கேட்கப்பட்ட பலதரப்பட்ட கேளிவிகளுக்கு, உய்த்துணரும் இயல்புடனும், முறைமையாற்றல் மாறாத நியதியுடனும், சுருங்கக்கூறின் - logic –ஆகப் பேசி நெத்தியடி பதிலளித்தார்.


ஸவூதி அரேபியாவில் டாக்டர். நாயக்-கின் Peace தொலைக்காட்சி சேனலுக்கான மண்டல மேலாளர் அஷ்ஷேக் ஜமான் அல்-ஜஹ்ரானி, ஸவூதி அரேபிய தொழில் அதிபர் அஷ்ஷேக் காலித் அல்-அன்ஸாரி, குவைத் தொழில் அதிபர் அஷ்ஷேக் வலீத் அல்-கானிம், இஸ்லாமிய நிலையம், குவைத் தலைமையக அழைப்புப்பணித் துறை மேலாளர் அஷ்ஷேக் காலித் அல்-ஸபா, இந்திய முஸ்லிம் சங்க தலைவர் முஹம்மத் அஸ்லம், கேரள இஸ்லாமிய சங்க தலைவர் ஃபைஸல் மஞ்சேரி ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பி.எஸ். ஷர்ஃபுதீன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

முஸ்லிம் அல்லாத சகோதர-சகோதரிகளுக்கான சிறப்பு நிகழ்ச்சி கேதான், கர்நாதா அரங்கில் 01.03.2008 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. 'இஸ்லாம்: ஒரு பிரச்னையல்ல, அதுதான் தீர்வு" எனும் தலைப்பில் பேருரையாற்றிய டாக்டர். நாயக் நவின உலகின் பிரச்னைகளுக்கு இஸ்லாம் தீர்வாவது எப்படி என்று அறிவியல் மற்றும் புள்ளிவிவர ஆதாரங்களுடன் நிரூபித்தார். பின்னர், நடைபெற்ற கேள்வி பதில் நிகழ்ச்சியில் முஸ்லிமல்லாத சகோதர-சகோதரிகளின் வினாக்களுக்கு வழக்கம்போல் தனக்கேயுரிய பாணியில் பதிலளித்தார்.

குவைத்தில் டாக்டர். ஜாகிர் நாயக்-கின் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்த இஸ்லாமிய நிலையம் IPC தலைமையகத்துக்கும் டாக்டர் வருகை தந்து நிர்வாகிகள் மற்றும் ஊழியர்களுடன் சறிது நேரம் செலவிட்டார்.

டாக்டர். ஜாகிர் நாயக் - கின் இந்த பயணம் குவைத் வரலாற்றில் ஒரு மறக்க முடியாத பதிவு என்றால் அது மிகையல்ல!

- ஃபைஸி உதவியுடன்
முஅ.அப்துல் முஸவ்விர்
படங்கள்: மஹ்மூத் பக்கர்



வசந்தம்
வாசகர்களுக்காக
டாக்டர். ஜாகிர் நாயக்
அவர்களின் உரைத்தொடர்
மற்றும் பேட்டி விரைவில்
ஆரம்பம்..!
இறைவன் நாடினால்..!



# திருக் குர்ஆன் மனனப் போட்டி பரிசளிப்பு விழா!



IPC சார்பாக, ஜனவரி மாதம் - அரபியரல்லாத முஸ்லிம்கள் மற்றும் புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்காக நடைபெற்ற திருக் குர்ஆன் மனனப்போட்டியில் ஆண்களுக்கான பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுத்தொகை வழங்கும் விழா சுர்ரா - சர்வதேச இஸ்லாமிய தர்மசபை மாளிகையில் 20.02.2008 அன்று நடைபெற்றது.

இதில் திருக் குர்ஆன் மனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் பங்குகொண்டவர்கள் (872 பேர்) கலந்துகொண்டனர்.

பாகிஸ்தான் தூதரக அதிகாரி இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு



IPC-தலைமையக அழைப்புப் பணியாளர்கள்

வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசுத்தொகைக்கான காசோலைகளையும், பங்குபெற்றவர்களுக்கு சான்றிதழ்கள், அழகிய பரிசுகளும் வழங்கிக் கவுரவித்தார்.

இஸ்லாமிய நிலைய தலைமைப் புரவலர் அஷ்ஷேக் முஹம்மத் இஸ்மாயீல் அல்- அன்ஸாரி, தலைமையக அழைப்புப்பணித் துறை மேலாளர் அஷ்ஷேக் காலித் அல்-ஸபா, தலைமையக அழைப்புப்பணித்துறை பிரிவுத் தலைவர் அஷ்ஷேக் அப்துல் அஜீஸ் அல்-ஷம்மரி, IPC ஜஹ்ரா கிளை மேலாளர் அஷ்ஷேக் முஹம்மத் -அல் அனஸி, IPC கிளைகளின் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் மொழி சார்ந்த முஹம்மத் காலித் (சிவகுமார்) முதல் பரிசையும், முஹம்மத் ஸல்மான் (நடராஜன்), முஹம்மத் அலீ (பெரியசாமி) இரண்டாவது



பரிசையும் வெவ்வேறு பிரிவுகளில் வென்றனர்.

இந்தியா, இலங்கை, சீனம், பிலிப்பைன் நாடுகள் சார்பாக அவர்தம் தேசியத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான அரங்கங்கள், கணிணி முன்னிலைப் பொதுக்காட்சி வழங்கல்கள் - Power Point Presentations ஆகியவையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. IPC தலைமையகத்தின் பல்வேறு மொழி சார்ந்த அழைப்புப்பணி சகோதரர்கள் இதற்கான ஏற்பாடுகளைத் திறம்பட செய்திருந்தனர்.

திருக் குர்ஆன் மனனப்போட்டியில் பெண்களுக்கான பிரிவில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுத்தொகை வழங்கும் விழா பின்னர் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-இளவேனில்





அப்துல் அஜீஸ்-அல்-துவைஜ்



சிறப்பு விருந்தினர்



முஹம்மத் அலீ (பெரியசாமி)



முஹம்மத் காலித் (சிவகுமார்)



ஸல்மான் (நடராஜன்)

## இலங்கை சுதந்தர தின வைர விழா



இலங்கை சுதந்தர தின வைர விழா 04.02.2008 அன்று குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் நடைபெற்றது. குவைத்துக்கான இலங்கைத் தூதர் திரு. ஸையித் அப்துல் காதர் ஸுஹைல் அவர்கள் இலங்கை தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இஸ்லாமிய நிலைய அழைப்புப் பணி சகோதரர்கள் அமீர் ஹஸன் நைனார், முஹம்மத் ஜாபிர், முஹம்மத் நளீம், முஹம்மத் மிள்ஹான் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



# அனைவருக்கும் அன்பான அழகிய ஆதவன்!

எழுத்து



பைஸல் முஹம்மத்

உலகம் போற்றும் நற்குணவாதியாக திகழ்ந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதார் என்ற வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் அருட்கொடையாக வந்தவர். இந்நிலையில் அனைவருக்கும் அன்பான இந்த அழகிய ஆதவனின் நற்குணங்களைப் பற்றி கூறுவது என்பது 'கதிரவன் ஒளி வீசுகிறது" என்பதற்கு ஒப்பாகும். எனினும், குடும்பத்தார் விஷயங்களிலும் ஏனையோர் விஷயங்களிலும், நமது குணநலன்களை சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ள, நற்குணங்களை மேலும் வளர்த்துக்கொள்ள வளப்படுத்திக்கொள்ள உதவும் எனும் நோக்கத்துடன் நாம் முஹம்மத் (ஸல்) அவர்களின் நற்குணங்கள் சிலவற்றை பொதுவாகவும், தமது குடும்பத்தார், பணியாளர்கள், அந்நியர்களுடன் அவர்கள் பழகிய விதத்தை குறிப்பாகவும் நோக்குவோம்.

ஒரு ஆணுடன் மிக நெருக்கமும் அறிதலும் கொண்டவர் அவருடைய மனைவியே! உணவு, உடை, உறைவிடம் என்று அடிப்படை தேவையில்கூட பற்றாக்குறையான வாழ்க்கை வாழ்ந்த அண்ணலார் (ஸல்) அவர்களின் மனைவியர் தமது கணவரான முஹம்மத் (ஸல்) அவர்களைக் குறித்து அதிருப்தியுறவில்லை. ஒரு சிலர் அண்ணலார் அவர்களை மணமுடிப்பதற்கு முன் செல்வச் செழிப்பில் திளைத்தவர்கள்.



அதேபோல் தமது பணியாளர்களிடத்திலும் அவர்கள் நடந்து கொண்ட முறை போற்றுதலுக்குரியது. பணியாளர்களை அடிமைகள் போல் நடத்திய அந்தக் காலத்தில் நபி (ஸல்) அவர்கள் 'பணியாளர்களின் வியர்வை உலரும் முன் அவர்களின் கூலியை கொடுத்து விடுங்கள்" என்று கூறி பணியாளர்களின் உரிமைகளை உலகுக்கு பறைசாற்றினார்கள்.

பணியாளர்களை மென்மையாக மேன்மைப்படுத்திய இறைத்தூதரைப் பற்றி அனஸ் (ரலி) அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்: 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! 10 வருடங்கள் நபி (ஸல்) அவர்களுக்கு நான் பணிவிடை செய்துள்ளேன். நான் செய்த செயல்கள் குறித்து 'ஏன் இப்படி செய்தாய்? என்றோ, 'இப்படிச் செய்திருக்கக் கூடாதா? என்றோ கடிந்து கொண்டதில்லை. (ஆதாரம்: முஸ்லிம்)

இவ்வாறு கருணையே உருவான இந்த காருண்ய நபி (ஸல்) அவர்கள் வீட்டில் மட்டுமல்ல வெளியிலும் நற்குண வடிவாய் திகழ்ந்தார்கள். 'அண்டை வீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறார உண்பவன் என்னைச் சேர்ந்தவன் அல்லன்!" என்று கூறி அண்டை வீட்டார் மீதான நம் கடமையை நிலைநாட்டினார்கள். (ஆதாரம்: மிஷ்காத்)

அதுமட்டுமல்ல வேறொரு சந்தர்ப்பத்தில், 'அபூதர்ரே! நீர் குழம்பு சமைத்தால் தண்ணீரை அதில் அதிகப்படுத்தும். உம் அண்டை வீட்டாரையும் சற்று கவனியும்" என்று இறைத்தூதர் கூறியது அண்டை வீட்டார் மீதான அவரது கரிசனத்தையும் அக்கறையையும் எடுத்துக் காட்டுகிறது. (ஆதாரம்: முஸ்லிம்)

இவ்வாறு சாதி, மத, குல, இன பேதங்களைக் கடந்து அண்டை வீட்டாராக இருக்கக்கூடிய அனைவரிடத்திலும் சமூகப் பொறுப்புணர்வுடன் இணக்கமாகவும் சகோதரத்துவத்துடனும் இருக்க வேண்டும் என்பதை முஹம்மத் (ஸல்) அவர்கள் பெரிதும் வலியுறுத்தினார்கள். அதனுடைய தாக்கம் எந்தளவுக்கு இருந்ததென்றால் அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரலி) என்ற நபித்தோழரின் வீட்டில் ஒரு ஆடு அறுக்கப்பட்டது. அண்ணலார் (ஸல்) அவர்கள் வீட்டுக்கு வந்தவுடன் 'நமது அண்டை வீட்டிலுள்ள யூதருக்கு கொடுத்தீர்களா?" என இரு முறை கேட்டுவிட்டு பின்னர் கூறினார்கள்: 'அண்டை வீட்டாரை எனது வாரிசாக அறிவித்து விடுவாரோ என்று நான் அஞ்சும் அளவுக்கு ஜிப்ரஈல் (அலை) அவர்கள் எனக்கு வலியுறுத்திக்கொண்டே இருந்தார்கள்" (ஆதாரம்: திர்மிதி)

அண்டை வீட்டாரோடு நபி (ஸல்) அவர்கள் அணுகுமுறை ஆச்சரியப்படத்தக்கது! ஒருமுறை அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள்: 'உமரே! அண்டை வீட்டாராகிய நம்மோடு முஹம்மத் (ஸல்) அவர்கள் நடந்து கொண்ட முறையை நினைவில் கொள்ளுங்கள். அவர்களுக்கு வரும் அன்பளிப்புகளை எமக்கு அனுப்புவார்கள். நாம் பயன்படுத்திவிட்டு மீதமுள்ளதை அவர்களுக்கு அனுப்புவோம். அந்தளவுக்கு நம்மை நேசித்தார்கள் "

பரந்து விரிந்த கடலைப் போன்றது முஹம்மத் (ஸல்) அவர்களின் நற்குணங்கள்! நாம் பார்த்ததோ அவற்றில் சில துளிகளே! அண்ணல் (ஸல்) அவர்களின் உயர்ந்த நற்குணங்களைப் பற்றி திருக் குர்ஆனில் பல்வேறு இடங்களில் இறைவனே சான்று பகருகின்றான்.இறைவனின் இறுதி நபிகளார்-நம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களின் நற்குணங்கள் அக்கால மக்களுக்கு மட்டுமல்ல, இக்கால - எக்கால - முக்கால மக்களுக்கும் பொருந்தக்கூடியது. ■








# பிஞ்சுள்ளங்களையும் போற்றிய பிதாமகன்

எழுத்து



முஹம்மத் ஜாபிர்

சிறுவர் உரிமை பிரகடனம் இந்த நூற்றாண்டில்தான் முதன் முதலாக வெளியிடப்பட்டது என பரவலாக கூறப்படுகிறது. ஆனால் 1420 ஆண்டுகளுக்கு முன்னரே அது பிரகடனப்படுத்தப் பட்டுவிட்டது. அது வெறும் வறட்டுப் பிரகடனம் அல்ல! மாறாக இறையச்சமும் உண்மைப் பயனும் கொண்டதாக பரிணமிக்கிறது. அதனை வெளியிட்டு பிஞ்சுள்ளங்களையும் போறறிப் புகழ்ந்த அந்த பிதாமகன் முஹம்மத் (ஸல்) அவர்கள்!

இன்றைய சிறுவர் நாளைய உலகப் பூந்தோட்டத்தின் மலரும் மொட்டுக்கள். வருங்கால சமுதாயத்தலைவர்கள். இறைவன் வழங்கிய அருட்கொடைகள். நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய அமானிதப் பொருட்கள். பளிங்குக் கிண்ணங்கள். அவர்களை வடிவமைக்கப்பட வேண்டிய பச்சை களிமண்ணைப் போன்றவர்கள். இறைவழிப்பாதையின் அச்சில் அவர்களை வார்தெடுப்பதே நமது இலட்சியமாக இருக்க வேண்டுமே அன்றி, நம் மனம் போன போக்கிலே அவர்களை வடிவமைக்கக்கூடாது. அவ்வாறு செய்தால் அது ஈருலகிலும் இறைதுரோகம் செய்த குற்றத்திற்கு நம்மை ஆளாக்கிவிடும்.



பெற்றோரின் நேரடிப் பராமரிப்பில் வளருகின்ற சிறார்களுக்குறிய உரிமைகள் முழுமையாக வழங்குவதினூடாகவே அவர்களுக்கு மத்தியில் நீதம் நிலை நாட்டப்படும். முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்தில் நபித்தோழர் ஒருவர், தனது பிள்ளைகளிடையே வேற்றுமை பாராட்டியதை அண்ணலார் (ஸல்) அவர்கள் கண்டித்ததை அன்னாருடைய வரலாற்றில் காண்கின்றோம். முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலமாக, ஒரு தந்தையின் முன்பாக வைக்கப்பட்ட இக்கோட்பாடே சிறுவர் முன்னுரிமை பற்றிய மாபெரும் பிரகடனமாகும். 'உங்கள் பிள்ளைகளுக்கு முத்தம் தருவதில் கூட நீதம் செலுத்துங்கள்" என்று கூறி இப்பிரகடனத்துக்கு முத்தம் போன்ற சிறு விஷயம் கூட எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்தினார்கள்.

குடும்ப பூங்காவின் இதமான தென்றலே பிள்ளைகள். பெற்றோரிடமிருந்து பிள்ளை எதிர்பார்ப்பது அன்பையும் பாசத்தையும்தான். வெளிநாட்டு வேலைவாய்ப்பு, உள்நாட்டுப் பணி போன்றவைகளால் பிள்ளைகள் தமது பெற்றோரின் ஆதரவை அரவணைப்பை இழந்து உளரீதியாகப் பாதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. மேற்படி அன்பும் பாசமும் கிடைக்காதபோது அவர்களது சிந்தனைப் போக்கிலும், நடத்தையிலும், பண்பாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அவர்களது பேச்சுக்களும் மோசமானதாகவே அமைகின்றது.

முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது பேரர்களை முதுகிலே ஏற்றி வைத்து ஒட்டகத்தைப் போல வீட்டைச் சுற்றி வலம் வருவார்கள். இறை வழிபாட்டின்போது கூட இந்த அன்பை செலுத்திட அவர்கள் மறந்துவிடவில்லை. தனது இரு பேரர்களையும் பார்த்து 'இவ்விருவரும் இவ்வுலகத்திலுள்ள எனது துளசிப் பூக்கள்" என்று கூறி அன்பைப் பரிமாறுவார்கள். (ஆதாரம் : புகாரி)

அன்பைப் பரிமாறாதவர்களை இறைத்தூதர் கண்டித்தார்கள். அல் அக்ர.:. இப்னு ஹாபிஸ் என்பவர் 'எனக்குப் பத்துப் பிள்ளைகள் இருக்கின்றனர். ஒருவரையும் நான் முத்தமிட்டதில்லை" என்றார். அதற்கு நபியவர்கள் 'இரக்கம் காட்டாதவர் இரக்கம் காட்டப்படமாட்டார்" என்று கூறினார்கள். (ஆதாரம் : புகாரி)

அழகான பிள்ளை, கருப்பு பிள்ளை, செவத்த பிள்ளை, தாய்-தந்தையர் சொல் தட்டும் பிள்ளை, மூத்த பிள்ளை, இளையபிள்ளை, ஆரோக்கியமான பிள்ளை, ஊனமுற்ற பிள்ளை, தனது வயிற்றுப் பிள்ளை, தனது கணவருக்கு அடுத்த மனைவி மூலம் கிடைத்த பிள்ளை, வளர்ப்புப் பிள்ளை போன்ற முள்வேலிகளால் 'அன்பு" எனும் மாபெரும் தோட்டத்தை வெவ்வேறாகப் பிரித்து விட்டால் மழலை உலகம் படுபயங்கரமான வீழ்ச்சிக்கு சென்றுவிடும்.

> இஸ்லாத்தில் சிறந்தது,
> தனக்கு தேவையற்றதை விட்டுவிடுவதாகும்!
> -நபிமொழி-

சகல உரிமைகளும் இழந்து பல மில்லியன் சிறுவர்கள் இன்று உலகில் நடை பிணங்களாக உள்ளனர். அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சிறுவர்களுக்குரிய உரிமைகள் நீதத்துடன் வழங்கப்பட்டன. இதில் பாரபட்சம் காட்டப்படவில்லை. இதோ ஓர் வரலாற்று முன்னோடி :- இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலில் நடைபெற்ற 'பத்ர்" எனும் புனித மார்க்கப் போரில் முஸ்லிம்கள் இறை நம்பிக்கை எனும் ஆயுதத்தை மட்டுமே நம்பி, இறை நிராகரிப்பபளர்களுடன் மோதிய அப்போரில், முஸ்லிம்கள் வெற்றிவாகை சூடினர். பல அறிஞர்களும் அதில் போர்க் கைதிகளானார்கள். அண்ணலார் (ஸல்) அவர்கள், அறிஞர்களை விடுவிக்கப் பிறப்பித்த கட்டளை, மதீனத்து சிறார்களுக்கு போதிய அளவு கல்வியைப் புகட்டவேண்டும் என்பதுதான். பாருங்கள்! சிறார்களின் கல்வி உரிமையை மேம்படுத்த போர் முடிவைக் கூட அண்ணலார் (ஸல்) அவர்கள் சாதகமாக்கிக் கொண்ட சாதுர்யத்தை. எனவே அண்ணலார் (ஸல்) அவர்களின் இப்பிரகடனம் சிறுவர்களின் உரிமை, கல்வி, மேம்பாடு அனைத்து உரிமைகளையும் தாங்கி நிற்பதைப் புரிந்து கொள்ளலாம். ■

# காலடியில் சிம்மாசனம் ஈச்ச ஓலையே அரியாசனம்!

இப்பூவுலகில் தாம் அனுப்பப்பட்டதற்கான பணி முடிவுற்ற பின்னர், அதன் வாழ்க்கையிலிருந்தும், ஏனைய மனிதர்களிடத்திலிருந்தும் விடைபெறும் அறிகுறிகள் அந்த முடிசூடா மாமன்னனிடமிருந்து தென்பட ஆரம்பித்தன. அந்த தானைத் தலைவனின் உணர்வுகள் அவற்றை எதிரொலிக்கவும் செய்தன. அவர்தம் சொல் செயல்களிலிருந்தும் அவை வெளிப்படலாயின. ஆனால், அவை எதுவொன்றிலும் இவ்வுலகில் தான் ஆற்றிய பணிகளுக்கான கூலியின் எதிர்ப்பார்ப்போ அல்லது குறைந்தபட்சம் தனது சந்ததியினருக்கான வசதிமிக்க வாழ்வின் பேரவாவோ கிஞ்சுற்றும் தென்படவில்லை... ஆம்! காலடியில் சிம்மாசனம் இருந்தும் கடைசி காலத்தில் ஈச்ச ஓலையே அரியாசனமாகக் கொண்ட அந்த செம்மல் யார் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை...

மனித இனத்தின் வெற்றிக்காக அயராது உழைத்த முஹம்மத் (ஸல்) அவர்கள் - இஸ்லாமிய நாட்காட்டியான ஹிஜ்ரி 11, ஸஃபர் மாதம் ஆரம்பத்தில் உஹது எனும் மலையின் அடிவாரம் சென்றார்கள். அங்கு இறைநெறிக்காக வீரமரணம் அடைந்த தியாகச்சீலர்களுக்ககாக வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அன்னாருடைய இச்செயல், உலகில் லாழ்ந்து கொண்டிருப்பவர்களிடமிருந்தும் இவ்வுலகை விட்டுப் பிரிந்தவர்களிடமிருந்தும் பிரியாவிடை பெறுவது போன்று இருந்தது. பின்னர் தனது பள்ளிவாசலுக்கு சென்று பேருரையாற்றும் (மிம்பர்) மேடையில் ஏறி 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்குப் பிறகு நீங்கள் இணைவைப்பவர்களாக மாறிவிடுவீர்கள் என்று நான் அஞ்சவில்லை. இவ்வுலகத்திற்காக நீங்கள் பரஸ்பரம் மோதிக்கொள்வீர்களோ என்றுதான் அஞ்சுகின்றேன்" என்றார்கள்.

மதீனாவில் அமைந்த 'பகீஃ" மண்ணறைக்கும் சென்று அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டவர்களுக்காக பாவமன்னிப்புக் கோரினார்கள்.

இதோ, அன்னாரின் இறுதி ஐந்து நாட்கள்!

ஒரு புதன்கிழமை அவர்தம் இறுதி சபை கூட்டப்பட்டது. அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்துவிட்டு,'யூத கிறித்தவர்கள் தங்களின் தூதர்களுடைய அடக்கஸ்தலங்களை வணக்கஸ்தலங்களாக மாற்றிக்கொண்டது போல நீங்களும் எனது அடக்கஸ்தலத்தை வணக்கஸ்தலமாக ஆக்கிவிடாதீர்கள்." என்று எச்சரித்தார்கள்.

தன்னிடம் பழிதீர்க்க ஏதேனும் நிலுவையில் இருப்பின் அதற்காக மக்களிடம் தன்னை ஒப்படைத்தார்கள். 'யாரையாவது நான் முதுகில் அடித்திருந்தால், இதோ எனது முதுகு.. பழி தீர்த்துக் கொள்ளுங்கள்; கண்ணியக்குறைவாக யாரையாவது ஏசியிருந்தால், இதோ நான் முன் வந்துள்ளேன்... அவர் என்னிடம் பழி தீர்த்துக் கொள்ளட்டும்!" என கூறினார்கள்.

மரணிப்பதற்கு ஒரு நாள் முன்பு!

ஞாயிற்றுக் கிழமை! தங்களிடமுள்ள அனைத்து பணியாளர்களையும் விடுதலை செய்தார்கள். தமக்கு சொந்தமான ஆறு அல்லது ஏழு தங்கக்காசுகளையும் தர்மம் செய்தார்கள்.

திங்கட்கிழமை! முற்பகல்...

தனது அருமை மகள் ஃபாத்திமாவை வரவழைத்து அவரிடம் இரகசியமாய் ஏதோ கூறினார்கள். அதைக் கேட்டவுடன் ஃபாத்திமா (ரலி) அவர்கள் அழலானார்கள். மீண்டும் முஹம்மத் (ஸல்) அவர்கள் சில விஷயங்களை அவரிடம் கூறவே ஃபாத்திமா (ரலி) அவர்கள் சிரிக்கலானார்கள்! இதுகுறித்து அன்னை ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் பிறிதொரு சந்தர்ப்பத்தில் வினவப்பட்டபோது கூறினார்கள்: 'எனக்கு ஏற்பட்ட இந்த வலியினாலேயே நான் இறந்தவிடுவேன் என நபியவர்கள் கூறியபோது அழுதேன்; அவர்களது குடும்பத்தாரில் நான்தான் முதலில் அவர்களை சென்றடைவேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபோது நான் சிரித்தேன்"

இறுதியாக, ஹிஜ்ரி 11, ரபீஉல் அவ்வல் 12, திங்கட்கிழமை முற்பகல் முடியும் நேரம்! நபியவர்கள் நல்ல முறையில் பல் துலக்கிவிட்டு 'வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் (எதுவும்) இல்லை; மரணத்துக்குப் பல மயக்கங்கள் இருக்கின்றன!" என்று கூறி, 'அல்லாஹ்வே! என்னை மன்னிப்பாயாக! என் மீது கருணை காட்டுவாயாக!! மிகச்சிறந்த நண்பனுடன் என்னைச் சேர்த்து வைப்பாயாக!!!" மிகச்சிறந்த நண்பனுடன்...என்பதை மட்டும் மூன்று முறை கூறிய பின் உயர்ந்திருந்த அவருடைய கைகள் சாய்ந்தன. இன்னாலில்லாஹி.. (நாம்.) அப்போது. இந்த முடிசூடா மாமன்னனின் வயது 63 வருடங்கள், 4 நாட்கள் மட்டுமே!

பாருங்கள்! 23 ஆண்டுகளில் அரபுலகம் மட்டுமல்ல, உலகின் பெரும்பகுதியையே ஓரிறைக்குடையின் கீழ் கொண்டு வந்த இந்த ஏந்தலின் இறுதிநாட்கள் எப்படி கழிந்தன என்பதை!

சற்றே சிந்தியுங்கள்! முஹம்மத் (ஸல்) போன்ற பேரும் புகழும் பெற்ற மனிதர் உலகில் எவரும் இருந்ததில்லை. இல்லை. இருக்கப் போவதுமில்லை! ஆனால், உலகியல் ரீதியான மக்கள் மத்தியில் புகழுடன் விளங்கும் தலைவர்கள் தமது இறுதிக்காலத்தை எப்படி கழிக்கின்றனர்?

மரணம் நெருங்குகின்றது என்று தெரிய வந்தவுடன்... தமது சொந்த மகளை அழைத்து மரணம் குறித்த நிதர்சன உண்மையையா கூறுவார்கள்? இல்லை! மாறாக, எந்த வங்கியில்-யார் யாரிடம் எவ்வளவு பணம் வைக்கப்பட்டடிருக்கின்றது, பினாமிக்கள் பெயரில் சொத்துக்கள் எவ்வளவு என்றல்லவா பட்டியல் வாசிப்பார்கள். வழக்குரைஞர்கள் புடை சூழ மரண சாசனம் அல்லவா அரங்கேறிக் கொண்டிருக்கும். இயன்ற வரை உயிர்காக்க முயல்வார்களா, மண்ணறைக்கு சென்று தம் வருகையை அங்கு எற்கனவே அடக்கமானவர்களுக்குத் தெரிவிப்பார்களா?

பாருங்கள் இந்த ஈடு-இணையில்லா நாயகனை!

காலடியில் கிடந்த சிம்மாசனத்துக்கு சிறிதும் ஆசைப்படாமல், ஈச்ச இலையையே அரியாசனமாகக் கொண்டு முதுகில் தழும்புகளைத் தாங்கிக் கொண்ட இந்த மகோன்னத மாமன்னன், பழி இருப்பின் தீர்த்துக்கொள்ள தன் முதுகைத் தர அல்லவா முன்வந்தார். யாருக்கு வரும் இந்த தாராள பொன்மனம்? எவரிடம் இருக்கும் இந்த மறுமை அச்சம்?

ஆம்! இந்த முடிசூடா மாமன்னனை வையகம், தான் உள்ளவரை போற்றிப் புகழ்வதில் எந்தக் குறையும் வைக்காது! ■

எழுத்து



அமீர் ஹஸன் நைனார்





# பெண்ணினத்தைப் போற்றிய பெருமானார் (ஸல்)

நல்ல பண்புகள்-பழக்கவழக்கங்கள்-ஆற்றும் சேவைகள் ஆகியன ஒருவரை மக்கள்பால் ஈர்ப்பது இயல்பு. அவ்வாறாயின் சகல நற்குணங்கள், நல்ல மனித இயல்புகள், ஆளுமைப் பண்புகள் ஆகிய அனைத்தும் ஒருங்கே ஒருவரிடம் பொதிந்திருந்தால் அவர் மக்களால் எந்த அளவு கவரப்படுவார் என்பதை சொல்லியா தெரிய வேண்டும்? இதனால்தான் நற்பண்புகளின் சிகரமாய்த் திகழ்ந்த பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களை அனைவரும் நேசித்தார்கள்; அவர்கள் அண்ணலாரைக் குறித்தோ அல்லது அவரது வாழ்க்கை வரலாற்றைக் குறித்தோ அறிந்திருந்தாலும் சரி, அறிந்திருக்காவிட்டாலும் சரியே! இஸ்லாத்தைத் தம் வாழ்க்கைநெறியாக ஏற்காத மகாத்மா காந்தி போன்ற பெரியார்களும்கூட முஹம்மத் (ஸல்) அவர்களைப் போற்றினர்; அன்னாரது சரிதையால் கவரப்பட்டனர்.

அனைத்துக்கும் மேலாக வல்ல நாயனான அல்லாஹ்வே தனது திருமறையில் முஹம்மத் (ஸல்) அவர்களின் உன்னத அந்தஸ்தை இவ்வாறு புகழ்கின்றான்:
'(நபியே!) நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம்." – திருக் குர்ஆன் 21:107

அதுமட்டுமல்ல, தாம் பின்பற்றத் தகுந்த அழகிய முன்மாதிரியான சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலான பூரணத்துவம் இந்த மாமனிதரிடம் இருந்தது. அதனால்தான் அவரை இறுதித்தூதராக அனுப்பி வைத்த இறைவனும்,

'உண்மை யாதெனில், உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடத்தில் ஓர் அழகிய முன்மாதிரி இருந்தது" - திருக் குர்ஆன் 33:21
என்று புகழாரம் சூட்டுகின்றான்!

இந்த முன்மாதிரி சமூகத்தின் முக்கிய அங்கமான பெண்ணினத்துக்கும் பொருந்தும். இப்பேரண்டத்தில் பெண்ணின வாழ்வு சீர்பெற ஒரே வழி இப்பெண்ணின பாதுகாவலனை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவதைத் தவிர வேறு வழிமுறைகளுக்கான எவ்வித வாய்ப்பும் இல்லை!

அந்தோ! இன்றைய சமூக நிலை என்ன? பின்பற்றப்பட வேண்டிய பாதை தெளிவாக்கப்பட்ட பின்னரும் வீட்டு விவகாரங்கள் முதல் அரசியல் களங்கள் வரை இன்னும் பெண்ணுரிமை குறித்து விவாதிக்கப்பட்டு வருகின்றன. இறுதியில் குறுகிய சிந்தனை கொண்ட ஒருசில ஆண்வர்க்க ஆதிக்கவாதிகளால் முன்வைக்கப்படுகின்ற கருத்துக்களே கோலோச்சுகின்றன. பெண்ணினத்துக்கே கேடாகவும் அமைகின்றன. பெண்ணுக்குரிய மதிப்பு, மாண்பு, வெற்றி உண்மையாகப் பேணப்பட வேண்டுமானால், அதற்கு ஊற்றுக்கண்ணாக விளங்கும் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டலிலல்தான் இருக்க முடியும். இதனை அறிந்துகொள்ள புரிந்துகொள்ள வேண்டுமானால் முஹம்மத் (ஸல்) அவர்களின் தூதத்துவத்துக்கு முந்தைய பெண்ணின் நிலைமை எவ்வாறு இருந்தது என்பதைத் தெரிந்துகொள்வது சாலப் பெருத்தமானது.



கி.பி. 586-ஆம் ஆண்டில் பிரான்ஸில் நடந்த பெண்ணுரிமை மாநாட்டில் பெண் என்பவள் - ஆன்மா உடையவளா? அவள் மனித இனமா? மிருகமா? என மாநாடு கூடி ஆராயுமளவுக்கு சர்ச்சைக்குரிய அம்சமாக இருந்தது.

ஆதிகால அரபிகள் பெண்குழந்தை பிறப்பதையே இழிவாகக் கருதினர். சிலர் பெண்குழந்தையை ஈவு-இரக்கமின்றி உயிரோடு புதைத்தனர். வாழும் உரிமையைப் பெறவே குதிரைக் கொம்பாக இருந்த அக்காலத்தில் ஏனைய வசதிகளைப் பெறுவது குறித்து பெண்கள் நினைத்தும் பார்க்க முடியுமா, என்ன? பெண் என்பவள் உணர்வுகளற்ற சடப்பொருளாகக் கருதப்பட்டாள். சந்தையில் வாங்கி விற்கப்படும் ஒரு பொருளாகக் நடத்தப்பட்டாள். வேறு சில சமூகங்கள் பெண்ணை தீமையின் பிறப்பிடமாகக் கருதியது மட்டுமல்ல, அவளுடைய கணவன் இறந்து போனால், அவனுடன் சேர்த்து அவளையும் தீயில் எரித்துவிடும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒரு கட்டாய சடங்காகவே நிறைவேற்றி வந்தனர்.

அரபுநாடுகளில் மட்டுமல்ல, இந்த கீழ்த்தரமான போக்கு முழு உலகிலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. இத்தகைய கொடுங்கோல் மானுட சமூகக் காலத்தில்தான் ஓர் அதிசயம் நிகழ்ந்தது!
அந்த அதிசயம் என்ன?

*அடுத்த இதழிலும் தொடரும், இறைவன் நாடினால்.!*

*உலகம்*
*இறை நம்பிக்கையாளனின் சிறைவாசகம்,*
*இறை நிராகரிப்பாளனின் சுவனதேசம்!*
*-நபிமொழி*

எழுத்து



ஃபர்ஸானா ஃரபீக்

குணநலன்

# நற்குணங்களின் நாயகன்

எழுத்து



உமைரா நூருல் ஹம்ஸா

தோன்றிப் புகழோடு தோன்றுக – அ·.திலார்
தோன்றலின் தோன்றாமை நன்று
என்றான் திருவள்ளுவன்.

இவ்வுலகம் கோடானுகோடி மக்களைக் கண்டிருக்கின்றது. இன்றும் கண்டுகொண்டிருக்கின்றது. மறுமைநாள் வரையும் காணும்! ஆனால் அவர்களில் சிலர் சாதனைகள் படைத்து சென்றிருக்கின்றனர். அவர்தம் புகழ் இன்றும் நீடித்திருக்கலாம். ஆனால், மக்கள் உள்ளங்களில் நீங்காது இடம் பிடித்திருக்கின்றார்களா என்பது கேள்விக்குறியே! ஏனெனில், தம் சாதனைகள் பற்றிய நோக்கத்தில்தான் அவர்தம் செயல்பாடுகள் அமைந்திருந்தனவே தவிர, பொதுநலன்கள் பற்றிய அக்கறையில் அவை வார்த்தெடுக்கப்படவில்லை! அதுகுறித்து பெரிதாக அலட்டிக்கொள்ளவுமில்லை. ஆனால், வள்ளுவன் கூறிய உலகப்புகழ் மட்டுமல்ல மறுமைவாழ்வில்கூட முடிசூடா மன்னனாய் புகழே - புளங்காகிதம் அடையும் வகையில் தோன்றினார் ஒருவர். இத்தகு சுயநலம் சார்ந்த பெருங்கூட்டத்தினர் மத்தியில் வாராது வந்த மாமணியாய் - ஒவ்வொரு நாழிகையும் மக்களின் உலகவாழ்வு மட்டுமல்ல, அவர்தம் மறுமை வாழ்வு குறித்தும் பெரும் அக்கறை கொண்டவராய் வாழ்ந்தார் அவர்.



பிறக்கும் முன்னரே தந்தையை இழந்து மழலை மொழி பேசி தன் தாயை மகிழ்வித்து, கொஞ்சி விளையாட வேண்டிய பருவத்திலேயே அவளையும் இழந்தார். இவ்வாறு அநாதையாய்ப் பிறந்து வளர்ந்தும் கூட தனது வாழ்விலே ஒரு நிமிடமேனும் பிற மனிதர்களுக்கு தீங்கை நாடாத மகா உன்னத உள்ளத்தையுடைய உத்தமராகத் திகழ்ந்தார். ஆம், தீமைகள் புற்றீசல் போல் பரவியிருந்த அவ்வறியாமைச் சூழலிலே தீமைகளின்பால் ஓர் அடியும் எடுத்து வைக்காமல், ஏன், தன் மூச்சுக்காற்றும்கூட படச்செய்யாமல் தூய சிந்தனையுடையவராய் விளங்கினார். எந்தவொரு பல்கலைக்கழகத்திற்கும் செல்லாமலே அஸ்ஸாதிக்-உண்மையாளர், அல் அமீன்- நம்பிக்கையாளர் போன்ற பட்டங்கள் அவர்தம் காலடியில் முத்தமிட்டன.

சுவனத்தின்பால் தம்மை இட்டுச்செல்லும் ஈடு-இணையற்ற தலைவர் எனும் மதிப்பில் முஸ்லிம்கள் அவரைத் தம் உயிரைவிட மேலாக நேசிக்கலாம். எனினும், அண்ணலார் குறித்து கருத்து வேறுபாடுகள் கொண்ட பிறமத மானுடரும் தமது உள்ளத்தில் அவருக்கு ஒரு சிறந்த இடத்தை வழங்கியிருக்கின்றார்களே... அதுதான் இந்த தலைசிறந்த தானைத்தலைவனின் தனிச்சிறப்பு!

முஹம்மத் (ஸல்) அவர்கள் பொறுப்புமிக்க குடும்பத்தலைவராக, மனைவியர் நலன் நாடும் கணவராக, மக்கள் நலன் குறித்து அனுதினமும் கவலைப்படும் மார்க்கத்தலைவராக, சமுதாய நலன் நாடும் சமூகத்தலைவராக விளங்கினார்கள். இத்தகைய பெரும் பொறுப்புக்களைச் சுமந்த தலைவராக இருந்த சந்தர்ப்பத்திலும் அவரது உள்ளம் குறுகியதாகவோ-பிறர் குறித்து அலட்சியம் கொண்டதாகவோ இருந்ததில்லை மாறாக பூமியைவிட விசாலமானதாகவும் வசந்தகாலத்தின் மென்மை கொண்டதாகவும் இருந்தது.

முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றி இறுதி இறுதி இறைவேதம் திருக் குர்ஆன் இவ்வாறு இயம்புகின்றது: '(நபியே!) திண்ணமாக நற்குணத்தின் மிக உன்னதமான நிலையில் நீர் இருக்கின்றீர்!" (68:4) மேலும், முஹம்மத் (ஸல்) அவர்கள் தான் தூதராக அனுப்பப்பட்ட நோக்கம் பற்றிக் குறிப்பிடுகையில், 'நிச்சயமாக நான் நற்குணங்களை பூரணப்படுத்துவதற்காகவே அனுப்பப்பட்டுள்ளேன்" என்று கூறுகின்றார். ஒருமுறை, முஹம்மத் (ஸல்) அவர்களின் மனைவியரில் ஒருவரான ஆயிஷா (ரலி) அவர்களிடம் அன்னாரின் குணங்கள்பற்றி வினவப்பட்டபோது, "அவருடைய குணங்கள் திருக் குர்ஆனாகவே இருந்தது" என்று கூறினார். அதாவது அவர் ஒரு நடமாடும் குர்ஆனாக வாழ்ந்துவிட்டுச் சென்றார்கள்.

இன்றைய தலைவர்க ளைப் பாருங்கள்!

தமது இடமும் வலமும் 'வாழ்க" கோஷம் போடும் முகஸ்துதிக் கூட்டத்தினருடன் ஒருவித கர்வத்துடன் வலம் வராவிட்டால் அவன் தலைவனல்லன்!

சொந்த நாட்டிலே வலம் வர இராணுவப் பாதுகாப்பு.

எடுபிடிக்கு ஏவலாட்கள்;!

குடும்பத்துக்கு சேவை செய்ய கூடி நிற்கும் கூட்டம்!

ஆம், இந்த தலைவருக்கும் அனைத்தும் இருந்தது, ஆனால் சற்று வித்தியாசமாக!

அவர் பவனி வந்த இராணுவக் கவசம் பணிவு எனும் ஆடை!

பணிவு காட்டியவர்கள் அச்சத்தினால் அல்ல, அவரிடம் பயிற்சி பெற விரும்பியதால்!

எடுபிடிக்கு இருந்த ஆட்கள் அவருக்கு வேலை செய்ய அல்ல.., அவர் சொல்வதை-செய்வதை பதிவு செய்ய!

தானே சேவையின் நாயகனாக இருக்கும்போது தனது குடும்பத்துக்கு பணிசெய்ய ஆட்களை வைத்துக்கொள்வாரா அந்தக் குடும்பத்தலைவர்?


தனது குடும்ப வாழ்விலும் சரி, சமூக வாழ்விலும் சரி அவர் தூய உள்ளத்துடனும் நேர்மையுடனும் நடந்து ஒரு முன்மாதிரி மனிதனாக வாழ்ந்து விட்டுச் சென்றார். அத்துடன் அல்லாது, அன்பு, பண்பு - கருணை, மென்மை, பரிவு,பணிவு – நீதி, நேர்மை - நியாயம், நாணயம் - ஈகை, வாய்மை - வீரம், தீரம், போன்ற அழகிய நற்பண்புகளின் ஊடாக மனித உள்ளங்கள் தம்மை நெருங்குமாறு செய்த நாயகனாகவும் திகழ்ந்தாரே தவிர, மனித மனங்கள் வெருண்டோடக்கூடிய வகையிலான துர்க்குணங்களின் பக்கம் தலை வைத்துக்கூட அவர் படுக்கவில்லை. சுருங்கக்கூறின் சொல்லப்போனால் முஹம்மத் (ஸல்) நற்குணங்களின் முழுமுதற்வடிவமாக வாழ்ந்துவிட்டுச்சென்றார்.

அன்னாரின் நற்குணங்களில் நாம் கண்டது ஒரு சிலவற்றையே அனைத்தும் கூற ஆயுள் போதாது! இருப்பினும் அறிந்தது வரை பின்பற்றுவோம், அறியாததை அறிய ஆர்வம் காட்டுவோம்! ஏம் உயிரினும் மேலான இந்த நற்குண நாயகனை நாளும் போற்றுவோம்! ■



# அண்ணலார் (ஸல்) பற்றி மாற்றுமத அறிஞர்கள்


## வெற்றி வீரர்



உலகின் மிகச் செல்வாக்கு வாய்ந்த மனிதர்களின் பட்டியலில் முதலிடம் வகிப்பவராக நான் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தேர்ந்தெடுந்த்திருப்பது வாசகர்கள் சிலருக்கு வியப்பை அளிக்கலாம். சிலர் இதனை கேள்விக்குரியதாகவும் கருதலாம். ஆனால் முஹம்மத் (ஸல்) அவர்கள்தான் உலக வரலாற்றிலேயே சமயத்துறை, உலகியல்துறை இரண்டிலும் மிகவும் வெற்றிகரமானவராகத் திகழ்ந்த மாமனிதர்!

-Michael H. Hart, The 100: A Ranking of the Most influential persons in History, New York:Hart Publishing Company, Inc. 1978, p.33.


## மனிதகுலத்தின் மாபெரும் பாதுகாவலன்!



முஹம்மத் (ஸல்) உடைய மார்க்கம் குறித்து நான் மிக உயர்ந்த எண்ணமும் உன்னத மதிப்பும் கொண்டிருக்கக் காரணம் வீரியமிக்க அதன் உயிர்த்துடிப்பான அம்சங்களே!
நான் அவரைக் குறித்து ஆய்வு செய்ததிலிருந்து... அவர் 'மனித இனத்தின் மாபெரும் பாதுகாவலன்" என்று அழைக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. முஹம்மத் (ஸல்) அவர்களுடைய நம்பிக்கை இன்றைய ஐரோப்பியா ஏற்றுக்கொண்டு வருவதுபோல் நாளைய ஐரோப்பாவும் ஏற்கும் என்பதை இப்போதே முன்னறிவிக்கின்றேன்!

-Sir George Bernard Shaw in'The Genuine Islam", Vol. 1, No.8, 1936

## ஆச்சர்ய ஆசான்!



தனிப்பட்ட ஒரு மனிதர் பலதரப்பட்ட குல-கோத்திரத்தையும், நாடோடிகளாய்த் திரிந்த நாட்டுப்புறத்தவரையும் வெறும் இரு பத்து ஆண்டுகளில் ஆற்றல் மிக்க நாகரிகப் பண்பாட்டுச் செழுமை வாய்ந்த ஒரே தேச குடையின் கீழ் கொண்டு வந்திருப்பது என்னே ஆச்சர்யம்!

-Thomas Carlyle in his Heroes and Hero Worship.

## மனிதான புனிதர்



'நான் ஒரே இறைவனின் மீது நம்பிக்கை கொள்கின்றேன்; முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் திருத்தூதராவார்கள்" என்பதுதான் இஸ்லாத்தின முன்மாதிரியான மாறுபாடற்ற ஒரேவிதமான பறைசாற்றலாகும். ஒருபுறம், கடவுள் பற்றிய அறிவார்ந்த கருத்தோட்டத்தின் மதிப்பு, கண்ணுக்குப் புலப்படும் உயிரினங்கள், சிலைகள் மற்றும் பொருள்களின் அளவுக்கு குறைக்கப்பட்டதில்லை. இறைத்தூதருக்கு அளிக்கப்பட்ட உயர்மதிப்புகள் மனிதர் என்கின்ற அந்தஸ்தைத் தாண்டி (கடவுள் என்கின்ற அளவுக்கு) உயர்த்தியதில்லை. அவர் அளித்துவிட்டுச் சென்ற சிரஞ்சீவியான கட்டளைகள் அவரைப் பின்பற்றுவோர் அவருக்குக் காட்டும் நன்றியுணர்வை பகுத்தறிவு மற்றும் சமயத்தின் எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தி (மிகைப்படுத்த விடாமல் தடுத்து) வைத்திருக்கின்றன.

-Edward Gibbon and Simon Ocklay, History of the Saracen Empire, London, 1870, P. 54


## உயர் எண்ணங்களுக்கு உகந்தவன்



அரேபியாவின் இந்த தூதருடைய வாழ்க்கையையும், ஒழுக்கப் பண்புகளையும் தூயநடத்தையையும், படிப்பவர்களுக்கு - அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை அறிந்தவர்களுக்கு, அந்த வல்லமை மிக்க மாபெரும் இறைத்தூதர்களில் ஒருவரான இறுதித்தூதரைக் குறித்து உயர்வான எண்ணமே ஏற்படும். நானே அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் திரும்பத் திரும்பப் படிக்கும் ஒவ்வொரு முறையும் ஆற்றல் மிக்க அந்த அரபு போதகரின் மீது புதிய ஒரு மதிப்பும் புதிய ஒரு மரியாதை உணர்வும் ஏற்படுவதை நான் உணர்கின்றேன்!

-Dr. Annie Besant, The life and Teachings of Muhammed 1932, P. 4

## வாள்பலம் அல்ல, வக்காலத்து!



நபிகள் நாயகத்தின் மாறாத எளிமை, தம்மைப் பெரிதாகக் கருதாமல் சாதாரணமானவராக நடந்துகொள்ளும் உயர்பண்பு, எந்நிலையிலும் வாக்குறுதியைப் பேணிக்காத்த தன்மை, தம் தோழர்கள் மீது அவர் கொண்டிருந்த அழிய அன்பு, அவரது அஞ்சாமை, இறைவன் மீதும் தமது பிரச்சாரப் பணியிலும் அவர் கொண்டிருந்த முழுமையான நம்பிக்கை ஆகியவைதாம் அவரது வெற்றிக்குக் காரணங்கள்; இவையே உலக சக்திகள் அனைத்தையும் நபிகள் நாயகத்தின் முன்பும் அவர்களின் தோழர்கள் முன்பும் கொண்ட வந்து குவித்தன. எல்லாத் தடைகளையும் வெற்றிகொண்டன. அவரது மகத்தான வெற்றிக்கு இவைதாம் காரணமே தவிர வாள்பலம் அல்ல!

-Mahatma Gandhi, Young India, Quoted in The Light, Lahore for 16th September 1924.

## மாமேதை



தத்துவ போதகர், சொற்பொழிவாளர், இறைத்தூதர், சட்ட நிபுணர், மாபெரும் போர்வீரர், கருத்துக்களை வென்ற வரலாற்று வீரர், பகுத்தறிவுப்பூர்வமான கொள்கைகள், நம்பிக்கைகளை நிலைநாட்டியவர், மாயையகள்-கவர்ச்சிகள் இல்லாத பகுத்தறிவு ரீதியில் ஒரு கொள்கைவழி நாகரிகத்தை உருவாக்கியளித்த மாமேதை, ஒரே ஆன்மிக தலைமையில் இருபது பூவுலகப் பேரரசுகளின் நிறுவனர்தான் முஹம்மத் (ஸல்) அவர்கள்!

-Lamartine, Historic de la Turquie, Paris 1854, Vol II, PP, 276-77

முஹம்மத் (ஸல்) அவர்கள் குறித்து அவர்கள் என்ன கூறுகின்றார்கள் எனும் மடக்கோலையிலிருந்து பிரதியெடுத்துத் தொகுத்தவர் ரஹ்மா (மெர்ஸி)

# அரேபிய நாயகம்! அகிலத்துக் காவியம்!!

கவிதை

-ஸினூ.:.பா அன்ஸார்-

முடிவுரைகளற்ற ஒரு முன்னுரையை
முக்குளித்தெடுத்து அட்சரங்களாய்
முடித்து அணிசேர்க்க இதுஒரு
முடிவுகளே அற்ற காவியமே!

கோக்களாய் இருந்த அவர்தம் மக்கள்
கோத்திரக் கோணங்களில் கோடிட்டு வாழ்ந்தனர்
மதுவை மருந்தாக்கி, சூதை சுலபமாக்கி
மகளிர் பிறப்பை மண்ணுக்காக்கினர்!

அன்னை மடியிலும் மாரிலும்
துயில்கொள்ள வேண்டிய
தூயமதலை மாமலர்களை கசக்கிப்புதைத்தன
மண்ணறைக்குழிகளிலே.., இந்த மரண இதயங்கள்!

நாளொரு கடவுளும் பொழுதொரு பூசையுமாக
இறைவழிபாட்டை இழுக்காக்கி
சுவனத்து சுகந்தமான 'கஅபா'-வின் சுவர்களை
இணைவைத்தல் கறையால் அழுக்காக்கினர்

ஏகத்துவம் போற்றி வந்த
தூதுத்துவ இறைஇல்லத்தை
நிர்வாணவலம் வந்து அதன்
தூய்மையை நிர்மூலமாக்கினர்

ஆம்! அவர்கள்-----------------------------------

வறண்ட பாலைத்தரைகளில்
திறள்(ந்த) பாவக்கரைகள்!
அகங்களை அழுக்காக்கி
வாழ்க்கையுகங்களை இழுக்காக்கிய ஈனர்கள்
இறந்துபோன இதயங்கள் கொண்ட
கொடுந்தேள் மானுடர்கள்!!

----------------------இந்த வேளையில்...

அநியாயங்களைப் புதைத்து அன்பை விதைத்து-
மரத்துப்போன அவர்களை மானுடராக்கி
அண்டசராசரத்தையே அகங்கைக்குள்
அணிப்படுத்தினார் ஒரு அழகுமைந்தர்!

அன்பும் அறனும் அழகுநற்குணங்கள்
அனைத்தயும் கொண்டு,
அகிலத்து கண்களுக்கு அறிவொளியூட்டினார்
அந்த அகிம்சைத் தலைவர்!

துன்பதுயரங்கள் சூழ்ந்தன பாலைப்புழுதி போல...
வேதனைவேள்வியில் வெந்துநொந்தது –அவர்
மேனியுடன் சேர்த்து இனியஇதயமும்கூட-எனினும்,
இறைகொள்கை இன்பத்தில் இவ்வுலகமாயையை
மறந்தார் அவர்!

ஆம்!-------------------- அவர்தாம்
எங்கள் தாயகமான நபிகள் நாயகம்!

வறண்டுபோன உலகுக்கு வரப்பிரசாதமாய்
வந்த வேந்தர்

எம் உயிரினும் மேலாக யாம் போற்றும்
காவியத்தலைவர்

வையம் உள்ளவரை புகழ் மழுங்காது மெருகேறும்
பொன்மனச்செல்வர்

அன்றைய அரேபியம் கண்ட
அகிலத்துக்காவியம்
அண்ணலார் (ஸல்)!



# எங்கள் வாழ்வை வளம் பெறச் செய்து என்றும் மங்காத இஸ்லாம் என்று சங்கே முழங்கு!



புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய சகோதரிகளுக்காக..!

## வசந்தகால வகுப்புக்கள்

மார்ச் முதல் ஜூன் 2008 வரை

**IPC** மகளிர் பிரிவு - ரவ்தா கிளை

| நாள் | | பாடம் |
|---|---|---|
| ஞாயிறு | - | திருக் குர்ஆன் பாடம் 4 |
| | | இறைத்தூதர்களின் வரலாறு - பகுதி 1 |
| திங்கள் | - | தூய்மையும் தொழுகையும் - ஆரமபப் பாடம் |
| செவ்வாய் | - | இறைத்தூதர்களின் வரலாறு - பகுதி 4 |
| புதன் | - | திருக் குர்ஆன் பாடம் 2 |
| | | இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) வாழ்க்கை வரலாறு - பகுதி 1 |
| வியாழன் | - | திருக் குர்ஆன் பாடம் 1 |
| | | இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் |
| வெள்ளி | - | ஓய்வு |

**சமுதாயத்தின் கண்களான பெண்களே!**

**உங்கள் பார்வைகளை அறிவொளி ஆக்கிக்கொள்ளுங்கள்!!**

தமிழ் வழி மார்க்க வகுப்புக்கள்!

(அனைத்து மகளிருக்கும் பொதுவானது)

பிரதி சனிக்கிழமைதோறும்

இடம் : கேதான் அத்தாஜ் பள்ளிவாயில்

(பெண்கள் பகுதி)

(பெரிய ஜம்இய்யாவிற்கு எதிரில்)

நேரம் : பிற்பகல் 4.30 முதல் மாலை 6.30 வரை

பாடங்கள் : முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

திருக் குர்ஆன் விளக்கம்

IPC ISLAM PRESENTATION COMMITTEE
Extn: 208 2444117
www.ipc-kw.com



சுண்டிப் பார்த்து தேர்வு செய்ய
வாழ்க்கையொன்றும் நாணயமல்ல..!

கையளவு இதயத்தை மெய்யறிவு கொண்டு அலசிப்பார்!
உயிரோவிய இலட்சியங்களை உன் உணர்வுப்பூச்சு கொண்டு தீட்டு!

யதார்த்தங்களைக் காண்பாய்...! விளங்குவாய்...!

உன் இலட்சியப்பாதையை அடைந்துகொள்ள...
இஸ்லாமிய நிலையம்
குவைத்




Extn: 208 2444117

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

...رحمة للعالمين

www.ipc-kw.com